Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (12.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 289

# தொண்டு அமைப்புகள் வெளியேறினாலும் வன்னி மக்களை அரசாங்கம் கைவிடாது

## தற்காலிக ஏற்பாடே என்கிறார் அமைச்சர்

கொழும்பு, செப்ரெம்பர்.12

"வன்னியில் இருந்து சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டதால் வன்னி மக்களுக்கான நிவாரண உதவி எந்த வகையிலும் பாதிப்படையாது. அரசு அந்த மக்களை ஒரு போதும் கைவிடாது. அவர்களுக்குத் தொடர்ந்தும் உதவிகளையும் பாதுகாப்பையும் வழங்கும்." -இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா.

வன்னியில் இருந்து மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டமை தற்காலிகமான ஏற்பாடுதான் எனக் கூறிய அமைச்சர், நிலைமை சரியானதும் அந்த நிறுவனங்கள் மீண்டும் வன்னிக்குச் சென்று செயலாற்ற முடியும் என்றார். (12ஆம் பக்கம் பார்க்க)

## "ராடர்" வழங்கியமைக்கு இந்தியாவுக்கு இலங்கை நன்றி

கொழும்பு, செப்.12

இலங்கையில் நடைபெறும் யுத்த நடவடிக்கைகளில் இந்திய படையினரோ, வெளிநாட்டு படையினரோ சம்பந்தப்பட

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் புலிகள் மீது படையினர் தாக்குதல்

கிளாலி, செப். 12

கிளாலிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகள் மீது வியாழக்கிழமை இராணுவத்தினர் மேற்கொண்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப் பணிகள் பாதிப்பு; ஐ.நா. கவலை!

கொழும்பு, செப். 12

மனிதாபிமான அமைப்புகளை வன்னியிலிருந்து வெளியேறுமாறு அரசு விடுத்துள்ள அறிவிப்புக் காரணமாக அப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் பாதிக்கப்படலாம் என ஐக்கிய நாடுகள் கவலை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அலுவலகத்தின் செய்திச் சேவைக்கு இதனைத்

(12ஆம் பக்கம் பார்க்க)



தெல்லிப்[...]ழை துர்க்கையம்மன் தே[...] ஆரோகணித்த போது எடுக்கப்பட்ட படம்.

## தொண்டு நிறுவனங்களை வெளியேற்றுவது இனக்குரூரத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு

### தமிழ்க் கூட்டமைப்பு அறிக்கை

கொழும்பு, செப். 12

வன்னியிலிருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களை உடனடியாக வெளியேற்றுவது இனக்குரூரத்தின் இன்னுமொரு உச்ச வெளிப்பாடாகும்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள், தமிழ் மக்களை இடைநடுவில் கைவிட்டுச் சென்றால் அது பொறுப்பற்ற செயலாகும்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் இன அழிப்புக்கு இலங்கையுடன் இந்தியா கைகோர்த்திருப்பது பச்சைத்துரோகம்

### பிரதமருக்கு வைகோ காரசாரமான கடிதம்

சென்னை, செப்.12

இலங்கை அரசாங்கத்தின் தமிழர் இன அழிப்புப் போருக்கு இந்தியாவும் கைகோர்த்துச்செயற்படுவது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளது. இது மன்னிக்க முடியாத பச்சைத் துரோகமாகும்.

இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நேற்று அனுப்பிய காரசாரமான கடிதம் ஒன்றில் கண்டித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு உதவி செய்யும் வகையில் தமிழர்களுக்கு எதிரான போரில், இந்தியா "ராடர்"களை வழங்கியதோடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இப்பொழுதும் இனி எதிர்காலத்திலும் கச்சதீவு இலங்கைக்கே சொந்தம்

### அரசு உறுதி; தமிழகத் தலைவர் கண்டனம்

கொழும்பு, செப். 12

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சதீவு இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், இனி எதிர்காலத்திலும் இலங்கைக்கே சொந்தம் என்று இலங்கை அரசு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

இந்தத் தீவை இந்தியா கையேற்க வேண்டும் என்ற கோரிக்கை சுயலாபத்திற்காக அரசியலை நடத்தும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளால் மாத்திரமே முன் வைக்கப்படுகிறது என்றும், அந்தக் கோரிக்கை முற்றிலும் நியாயமற்றது என்றும் அரசு மேலும் தெரிவித்தது.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இது தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கையொன்றை வெளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகசுர கானமழை பொழிந்த கானமூர்த்தி காலமானார்



யாழ்ப்பாணம், செப்.12

ஈழத்தின் புகழ்பூத்த நாகசுரக் கலைஞர் கலாபூஷணம் வி.கே.கானமூர்த்தி நேற்று முன்தினம் புதன்கிழமை தமது 63 ஆவது வயதில் காலமானார்.

கடந்த ஒருவார காலமாக சுகயீனமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை

(12ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி வருகின்றது "மீண்டும் வாழ்வோம்".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம்நிறைந்த நன்றிகள்

மாகாண மற்றும் தேசிய மட்ட
விளையாட்டுப் போட்டிகளில் யாழ். மாவட்டப்
பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ள
போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகளை
ஏற்பாடு செய்த கௌரவ சமூக சேவைகள்
அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது நன்றிகளைத்
தெரிவிக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் ஆங்கில ஆசிரியை
திருமதி அனுஷா கலாதேவன் அவர்களின்
பாசமிகு துணைவர்

**இராமலிங்கம் கலாதேவன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மீசாலை வீரசிங்கம்
மகா வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு நாகம்மா

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நாகம்மா நேற்று (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.09.2008) வெள்ளிக் கிழமை மு.ப 10.30மணிக்கு நயினாதீவு சல்லிபரவையில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுளக் கொள்ளவும்.

*7ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
தகவல்:
க.பத்மராசா

### வெள்ளைக்குட்டி கந்தையா
(ஓய்வுபெற்ற தபாலதிபர், சுன்னாகம்)



சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளைக்குட்டி கந்தையா நேற்று (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளைக்குட்டி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், கார்த்திகேசு - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனி (ஜேர்மன்), சித்ரா (ஆசிரியர், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), Dr.கணேசானந்தன் (யாழ். போதனா வைத்தியசாலை), சண்முகானந்தன், அம்பிகா, குகானந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமணி, அமரர் மனோன்மணி, அமரர் செல்லத்துரை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீரங்கநாயகன் (ஜேர்மன்), இராஜமனோகரன் (சமூகசேவை உத்தியோகத்தர், திருகோணமலை), Dr.நளாயினி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனும், பாக்கியலட்சுமி, சொர்ணலட்சுமி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சாமினி, நிரோஸ், விகஷா, கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சத்தடி வீதி,*
*இணுவில்.*
தகவல்:
குடும்பத்தினர்.

---

கல்விச் சேவையில் அதிபர், கலாபூஷணம்
நாற்கவிராசன், புலவர்மணி, செந்தமிழ்ச்செல்வர், பண்டிதர்

**கதிரேசு மயில்வாகனனார்** அவர்களின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கான அழைப்பு

இன்று (12.09.2008) (சர்வதாரி ஆண்டு ஆவணி 25 ஆம் நாள்) வெள்ளிக்கிழமை புலவர் மனையான "வேல்வாசம்" வட்டுக்கோட்டையில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும்.

புலவரின் நிலைத்த வாழ்வு வேண்டி நாம் துதி செய்யும் பிரார்த்தனையிலும் மதிய விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், அறிஞர், தமிழ் ஆர்வலர், அன்பர் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

*தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

"வேல்வாசம்",
வட்டுக்கோட்டை.
புலவர்மணியின்
குடும்பத்தினர்.

## சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் சூட்டுக்கு இலக்காகி மரணம்

யாழ்ப்பாணம், செப். 12

சாவகச்சேரி டச்சுவீதி ஓராம் கட்டையடியில் மிதிவண்டியில் சென்ற இளம் குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 9மணியளவில் இடம் பெற்றது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த தவராசா முரளிதாஸ் (வயது 30) என்பவரே சுடப்பட்டவராவார்.

சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று நண்பகல் உயிரிழந்தார். (01-207-25)

## யாழ்.வலயத்தில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்.கல்வி வலயத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3மணிக்கு யாழ்.வலயக்கல்விப் பணிமனையில் இடம்பெறும்.

வலய உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை இக்கலந்துரையாடலில் சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (01)

## திருமறைக் கலாமன்றத்தில் 'அந்த மான்' நாட்டிய நாடகம்

யாழ்ப்பாணம், செப். 12

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியற் கல்லூரியின் ஏற்பாட்டில் 'அந்த மான்' நாட்டிய நாடகம் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30மணிக்கு கலைத்தூது கலையகத்தில் அரங்கேறவுள்ளது.

இந்த நிகழ்வில் உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் இ.அ. திலகரட்ணம் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாகீர்த்தி, திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

## Spoken English With Grammar

Lecture
By: Mr.Nishanthan (Dip. in English)

ஆங்கிலத்தில் மிக குறுகிய
காலத்தில் பேச, எழுத, வாசிக்க
உரையாட புதிய பிரிவுகள்
பின்வரும் 3 நிறுவனங்களில்
ஆரம்பமாகின்றன.

1. பொருளியல் கல்லூரி -யாழ்ப்பாணம்
சனி, ஞாயிறு - 2 p.m.(13.09.2008)
2. பொருளியல் கல்லூரி -இணுவில்
செவ்., வியா. - 3.30 p.m (16.09.2008)
3. BARATHY- சித்தன்கேணி
சனி, ஞாயிறு 3.30 p.m (13.09.2008)

நீங்கள் விரும்பிய இடங்களில்
அனுமதிகளைப் பெறலாம்.

## வேலை ஆள்தேவை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத் தொடர்பு நிலையத்துக்கு பெண் ஊழியர்கள் தேவை.
T.P: 0779581383

## விற்பனைக்கு

புதிய மூன்று சில்லு மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
சிறீ கிருஷ்ணா வெல்டிங் வேக்ஸ்
மெயின் வீதி, மருதடி, பருத்தித்துறை.
T.P: 0776747290

## தவறிவிட்டது

D 16, தொடர்மாடி, குருநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த குயின் யோன்வாக் மைக்கல்றாஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (893010920 V) யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

கடந்த.(10.09.2008)புதன்கிழமை காலை தட்டாதெருச்சந்தியிலிருந்து மானிப்பாய் வீதி ஊடாக சுட்டுடைச் சந்திக் கிடையில் கைச்சங்கிலி ஒன்று தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்[illegible] யுடன் தொடர்புகொள்ளவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். தொ.பே.இல:060 221 6959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் - 2008
முதன்மை வெற்றியாளர்கள் - 15,19 வயதுப் பிரிவுகள்
திண்ணிய மனத்துடன் திறனை வெளிப்படுத்தி
எண்ணியவாறு முதன்மை வெற்றி பெற்று
சண்டிலிப்பாய் இந்துத் தாயின் உள்ளத்தை
மகிழ்வித்த
உன்னத வீராங்கனைகள் இன்னும் உயர்வு பெற
வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(வ/554615)

## மரண அறிவித்தல்கள்



கலாபூஷணம்,
நாகசுர வித்துவான்

### வி.கே.கானமூர்த்தி

கோண்டாவில் மேற்கு, காளிகோயிலடியைச் சேர்ந்த நாகசுர வித்துவான் வி.கே. கானமூர்த்தி நேற்றுமுன்தினம் (10.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
தகவல்:
*கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி*
*(மைத்துனர்).*

### கார்த்திகேசு தர்மலிங்கம் (மகாலிங்கம்)
(ஓய்வுபெற்ற பணியாளர், யாழ். கல்வித் திணைக்களம்)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தர்மலிங்கம் 05.09.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகமலரின் அன்புக் கணவரும், தர்மகுமார் (ரவி - லண்டன்), உமாபரன் (ரகு), ஜெயந்தினி (சுவிஸ்), சுரேஷ்குமார் (புவி - கனடா), மயூரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாதேவன், சபாரட்ணம், பாலசுந்தரம், இராமசந்திரன் ஆகியோரின் சகோதரரும், சந்திரகலா (லண்டன்), ஜெயந்தி, தவராசா (ஆனந்தன் - சுவிஸ்), ராதிகா (கனடா), கௌசி ஆகியோரின் மாமனாரும், பிரஷ்ணவி (லண்டன்), ததுர்சன் (லண்டன்), சுகந்தன், யானுஜா, மதுசன், றமிதன் (சுவிஸ்), யானுஷா (சுவிஸ்), றஞ்சனா (கனடா), நிலோன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மின்திரை,*
*குப்பிளான் தெற்கு.*
தகவல்:
உமாபரன் (ரகு - மகன்).

### யோசப் ஆசீர்வாதம்



629, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் ஆசீர்வாதம் 10.09.2008 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், ஞானமணியின் (இ.செ. சங்கம், யாழ் கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர்) அருமைக் கணவரும், வானதி (முன்பள்ளி ஆசிரியை, O.L.R), வயலற் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சாள்ஸ் (T.V எலற்க்றோனிக், பருத்தித்துறை), சாருஜன், சாளினி, சுபாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறில்லப்பு, எலிசபெத், காலஞ்சென்றவர்களான யேசுதாசன் நேசமணி மற்றும் ஜோச், அலக்ஸ், ஜசிந்தா ஆகியோரின் சகோதரரும், மேரி இந்திரா, லில்லி மெற்றலின், மொல்டன் ஜேம்ஸ், புஸ்பராணி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், யேசுதாசன் (பருத்தித்துறை), பீட்டர்போல் (கொலன்ட்) ஆகியோரின் சகலனும், நிரோசன், செல்விஜா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*629, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தகவல்
மனைவி,
பிள்ளைகள்.

# பருத்தித்துறை - சாவகச்சேரிப் பாதையில் மீண்டும் 765 இலக்க பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.12

பருத்தித்துறை - சாவகச்சேரி ஊடாக மீண்டும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 765 இலக்க பஸ்சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கனகன்புளியடிச் சந்தியூடாகக் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இச்சேவை நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம், மீசாலைச் சந்தி, வேம்பிராய் ஊடாக கனகன் புளியடிச் சந்திக்கு வந்து அங்கிருந்து மட்டுவில், நுணாவில் சந்தியூடாக சாவகச்சேரிக்கு நடத்தப்படுகிறது.

சரசாலை, மட்டுவில் பகுதி மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் நலன்கருதி இப்பஸ் சேவை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சரசாலை, கப்பூது ஊடாகச் செல்லும் வீதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரசாலை கொம்பிக்குளம் மயானத்திற்கு அருகிலுள்ள வீதியில் மதகு அமைப்பதற்காக போடப்பட்ட தற்காலிகப் பாதையில் மழைநீர் செல்வதற்குப் போட்டப்பட்டிருந்த குழாய்க்குள் அண்மையில் குண்டு வெடித்ததால் தற்காலிக பாதையின் பெரும் பகுதி சேதமடைந்தது. இதனால் வாகனங்கள் இவ்வீதியில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுவதாகவும் கப்பூது சந்தியில் வாகனங்கள் செல்லமுடியாதவாறு வீதியில் மரக்குற்றி போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## நல்லூர் ஆலயச் சூழலில் தவறவிடப்பட்ட பொருள்களை உரியவர்கள் பெறலாம்

நல்லூர், செப்.11

நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், கைக்கடிகாரங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டு யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்களைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் உறுதிப்படுத்தித் தமக்குரிய பொருள்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சுகாதார சேவைகள் அதிகாரி வைத்தியக் கலாநிதி எம்.மரியதாசன் கேட்டுள்ளார். (203-111)

# மண்டைதீவில் அதிகளவில் மரங்கள் வெட்டப்பட்டு பிரதேச வளம் அழிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

மண்டைதீவுக் கிராமத்தில் மரங்களை வெட்டும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன.

பூவரசு, வேம்பு, தென்னை ஆகிய மரங்களே அதிகளவில் வெட்டப்படுகின்றன. இதனால் பிரதேச வளம் அழிக்கப்படுவதாகவும் சூழல் பாதுகாப்பிற்கு இது குந்தகம் ஏற்படுத்தும் என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடல்நீர் தடுப்பணைகள் ஏற்கனவே சீரழிந்துவிட்டன. இதனால் கிராமத்தில் நன்னீர் வளம் உவராக மாறிவிட்டது. குடிதண்ணீருக்காக மக்கள் 'பௌசர்'களை எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நிலையில் எஞ்சியுள்ள தாவர வளமும் அழிக்கப்பட்டு வருகிறது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடியிருப்பாளர்கள் இல்லாத வீட்டு எல்லைப் பூவரச மரங்கள் வளவுகளில் உள்ள வேப்பமரங்கள் என்பன தறிக்கப்பட்டு வருகின்றன.

பச்சைமரங்களை அந்தத் தீவில் இருந்து எடுத்துவருவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையின் மத்தியிலும் அனுமதியின்றி மரங்கள் வெட்டப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. பெரிய மதவுக்கு வடக்காக உள்ள வெள்ளைக் கடல் பகுதியில் உள்ள வயல் வெளிகளின் எல்லைகளாக விளங்கிய பூவரச மரங்கள் முற்றாகத் தறிக்கப்பட்டுள்ளன. ஆவிகாடு, பனையடிக் காடு, சண்முகநாதன் தோட்டப் பகுதிகளில் உள்ள மரவகைகளும் தறித்தெடுத்துக் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தக் கிராமத்தின் சூழற் சமநிலையை பேணுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்டுள்ள மேலதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கையை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-302)

# நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ள தாய்மாருக்கு தொழில் பயிற்சிகள் வழங்க அனுமதி

யாழ்ப்பாணம்,செப்.12

நீதிமன்றத்தின் பாதுகாப்பில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் தாய்மாருக்கு வாழ்வாதாரப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

உளவளப் பயிற்சி, தொழில் பயிற்சி மற்றும் திறன் சார்ந்த ஆதாரப் பயிற்சி என்பனவற்றை வழங்குவதற்கு நீதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ள சிறுவர் மற்றும் தாய்மாருக்கே முதற்கட்டமாக தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தற்போது இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து தெல்லிப் பழை புனர்வாழ்வு நிலையத்திற்கு விரைவில் மாற்றப்படவுள்ளனர். அங்கு வைத்தே இவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி இந்தப் பயிற்சிகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-302)



தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட குதூகல சேமிப்புக் கணக்கின் முதலாவது புத்தகத்தை வாடிக்கையாளர் ஒருவருக்கு முகாமையாளர் வி.அருளானந்தம் வழங்குவதையும் அருகே உதவி முகாமையாளர் ஏ.தெய்வேந்திரன் மற்றும் வங்கி அதிகாரிகள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நெடுந்தீவில் கால்நடை வளர்ப்போர் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்

நல்லூர், செப்.11

நெடுந்தீவில் கால்நடை வளர்ப்போர் அவற்றை வெளி இடங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியாமையால் பெரும் நஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அவர்கள் வருமானம் எதுவும் இல்லாது கஷ்டமடைவதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த காலங்களில் அங்கு வளர்க்கப்படும் கால்நடைகளில் 200 தொடக்கம் 300 வரையானவை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதனால் கால்நடை வளர்ப்போர் கணிசமான வருமானத்தைப் பெற்று வந்துள்ளனர்.

தற்போது பெரும் எண்ணிக்கையில் கால்நடைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படாமையால் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கவலை தெரிவிக்கப் படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் முற்றிலும் பாதிப்படைந்துள்ளனர். (203-111)

# புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துறையினர் செய்த பிரசாரம் வவுனியாத் தாக்குதலினால் பொய்த்துப்போனது

விடுதலைப் புலிகளின் மரபு ரீதியான போராட்ட வலுவை முற்றாக அழித்துப் போராளிகளின் மன உறுதியை சிதைத்துவிட்டதாக சிறிலங்கா பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறிவந்த கருத்துக்கள் வவுனியாப் படைத் தளம் மீது வான்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் பொய்த்துப் போய்விட்டன.

இந்தியாவின் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பான றோவின் முன்னாள் பிரதிச் செயலரும் அனைத்துலக விவகார ஆய்வாளருமான பி.இராமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் குறித்து அவர் எழுதியுள்ள பத்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

சிறிலங்கா படையினரின் வவுனியாத் தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேர்த்தியாக திட்டமிட்டு நடத்திய தாக்குதல் சிறிலங்கா இராணுவத்தின் பொய்ப்பிரசார முகமூடியைக் கிழித்தெறிந்திருக்கின்றது.

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொடர்ச்சியாக படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிறிலங்கா இராணுவத்தினர், தமது தாக்குதல்களால் புலிகளின் ஒட்டுமொத்த மன உறுதியையும் சிதைத்து விட்டதாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

ஆனால், வவுனியாத் தாக்குதலைப் பார்க்கப்போனால் புலிகளின் மூத்த தளபதிகளோ போராளிகளோ எள்ளளவும் தமது உறுதியில் குலைந்துவிட்டதாகக் கணிப்பிடமுடியாது என்று அடித்துக் கூறவேண்டியுள்ளது.

புலிகளது மனஉறுதி தொடர்ந்து உச்ச நிலையிலேயே காணப்படுகிறது. அவர்களின் தளபதிகளின் நேர்த்தியான திட்டமிடலும் குறைந்த ஆள்பலத்துடனும் ஆயுத பலத்துடனும் படையினருக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் வியூகங்களும் அவர்களின் வீரத்தின் வீச்சை வெளிப்படுத்தியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் மரபுரீதியான போராட்ட வலுவை முற்றாக அழித்து போராளிகளின் மனஉறுதியை சிதைத்து விட்டதாக சிறிலங்கா இராணுவம் அண்மையில் கூறியிருந்தது.

இராணுவம் கூறியதைப்போல உண்மையிலேயே நடைபெற்றிருந்தால், புலிகளின் தளபதிகளினதும் [illegible] குறைந்திருக்கும் [illegible] களாக உடைந்து அதன் உறுப்பினர்கள் அந்த அமைப்பிலிருந்து தப்பியோடியிருப்பர்.

அவ்வாறு ஏதாவது நடைபெற்றதா?

அதற்குரிய எந்த அறிகுறியும் புலிகள் அமைப்பிலிருந்து தென்படவில்லை.

பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் மற்றும் இந்தியா ஆகியவற்றிடமிருந்து தொடர்ந்து ஆயுதங்களைப் பெற்று ஓயாது சண்டையிடும் சிறிலங்கா படைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் சளைக்காது சமரிட்டு வருகின்றனர்.

வன்னி மீது எத்தனை தடவைகள் சிறிலங்கா வான்படையின் வானூர்திகள் சென்று தாக்குதல்களை நடத்தினாலும் அங்கிருந்து புலிகள் தொடர்ந்தும் போராடிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

புலிகளின் இந்த தாக்குதல்களினால் - சிறி

## புலிகளின் மனஉறுதி மேலும் அதிகரித்துள்ளது என்கிறார் 'றோ'வின் முன்னாள் பிரதிச் செயலர் பி.இராமன்

லங்கா அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட - இராணுவம் பாரிய இழப்புக்களை சந்தித்து வருகின்றது.

ஈரானிடமிருந்து பெறும் பணத்தினால் பெருந்தொகையான ஆயுதங்களைத் தனது நேச நாடுகளிடம் பெற்று அவற்றைப் போரில் பயன்படுத்துவதில் மட்டும்தான் சிறிலங்கா படைகள் ஆசுவாசப்பட்டுக்கொள்கின்றன. இந்த வசதி புலிகளுக்கு இல்லை என்பது உண்மை.

விடுதலைப் புலிகளினது நேர்த்தியான திட்டமிடலையும் அரச படையினருக்கு எதிரான அவர்களது ஓர்மத்தையும் அண்மையில் இடம்பெற்ற வவுனியாத் தாக்குதல் தெளிவாக காண்பித்திருக்கின்றது.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அனுராதபுரம் படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் போன்று - ஒரு படி மேலே சென்று - வான் வழியாகவும் தரை வழியாகவும் - ஆட்லறி மூலமும் மிகவும் கவனமாகத் திட்டமிட்டு வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கையை விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருக்கின்றனர்.

தாக்குதல் மேற்கொண்ட புலிகளின் வானூர்திகளைக் கொழும்பிலிருந்து சென்ற தமது சிறப்பு தாக்குதல் வானூர்திகள் சுட்டு வீழ்த்தியதாக சிறிலங்கா வான்படை தெரிவித்திருக்கிறது. ஆனால், அதற்குரிய ஒளிப்பட ஆவணம் தம்மிடம் இல்லை என்று வான்படைப் பேச்சாளர் கூறியுள்ளார்.



அனுராதபுர படைத்தளம் மீதான புலிகளின் வான் தாக்குதலின்போதும் அது ஒரு கண்துடைப்பு தாக்குதல் என்றும் புலிகள் தமது இலக்கை அடையவில்லை என்றும் சிறிலங்கா அரசு முதலில் கூறியிருந்தது. ஆனால், பின்னர் வெளிவந்த சுயாதீன அறிக்கைகள் இராணுவத்துக்கு ஏற்பட்ட பாரிய இழப்பை வெளிக்கொண்டு வந்தன.

வவுனியா படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்திய புலிகளின் வானூர்திகள் ஆறு நிமிடங்கள் மாத்திரமே வவுனியா வான் பரப்பின் மேல் பறப்பில் ஈடுபட்டிருக்கின்றன. ஆகவே, அவ்வளவு நேரத்திற்குள் கொழும்புக்கு தகவல் போய், அங்கிருந்து வந்து புலிகளின் வானூர்தியைத் தாக்கியழிக்கவல்ல வேகமான வானூர்திகள் எவையும் சிறிலங்காவிடம் இல்லை.

சிறிலங்கா இராணுவம் தாம் ஈட்டிய வெற்றிகளை பூதாகாரப்படுத்தி வெளியிட்டுவிட்டு தமது தரப்பு இழப்புக்களை மூடி மறைத்துவரும் வேளையில், விடுதலைப் புலிகள் ஆதாரங்களுடன் இழப்பு விவரங்களை வெளியிட்டு வருகின்றனர்.

தாம் போரில் பாரிய இழப்புக்களை சந்தித்தாலும் கூட அதனை புலிகள் ஒருபோதும் மூடிமறைக்க முயற்சிப்பதில்லை.

இதனால்தான், விடுதலைப் புலிகளின் அறிக்கைகளை போராளிகளும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களும் நம்பகத்தன்மை உடையவையாக பார்க்கின்றனர்.

வவுனியா தாக்குதலைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை, சிறிலங்கா அரசு விடுத்த அறிக்கையிலும் பார்க்க கூடுதல் நம்பகத்தன்மை உடையது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *




# சிறுவர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.12

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் இயங்கிவரும் சிறுவர் கழகங்களின் உறுப்பினர்களிடையே கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

'பிள்ளைகளுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியான தாக்குவோம்' என்னும் தலைப்பில் நடத்தப்படவுள்ள இக்கட்டுரைப் போட்டியில் 12-18 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியும்.

கட்டுரைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்குமுன்னர் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (202-325)

# கைதடிப் பிரதேச முதியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இக்கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி கோயில் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தின் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் இந்நிகழ்வில் நடைபெற்றது.

பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட 160 முதியோர்கள் கழகத்தினால் அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் A/L 2009
★ மானிடப் புவியியல்
(வினா விடை உட்பட)
ஆரம்பம்:- 12.09.08 Fri- 5 p.m
A.Rajah
★ அரசியல்: T.அஜந்
★ இந்து நாக: S.சாந்திநீ
★ Gr.1 முதல் O/L வரை
English Medium 6.00 to 11.00
★ புலமைப் பரிசில் (5)
(ஆசிரிய பரீட்சைகளுடன்)
★ SINHALA
★ SPOKEN ENGLISH
G.Rangit
SHAMROCK
சச்சேரட்டை, யாழ்.

## 'கொடிக்கவி' இறுவட்டு வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், செப்.12

திருமறைக் கலாமன்ற சைவசித்தாந்த ஆய்வு வட்டத்தினரால், "கொடிக்கவி" இறுவட்டின் வெளியீட்டு விழா நரளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ஆசியுரை நிகழ்த்துவார். இந்தஇறுவட்டின்முதல்பிரதியை க.சிவபாதசுந்தரம் பெற்றுக் கொள்வார்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
Dr.K. கணேசாநந்தனின் அன்புத்
தந்தை வெள்ளைக்குட்டி கந்தையா
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**வைத்திய நண்பர்கள்,**
**யாழ்-போதனா வைத்தியசாலை.**

(78377)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆசீர்வாதம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர் திருமதி ஞானமணி ஆசீர்வாதம் அவர்களின் கணவரின் மரணச்செய்தி கேட்டு மிக வருந்துகின்றோம். அன்னாரின் ஆன்மா நித்திய இளைப்பாற்றைப் பெற சகல வல்லமையுமுடைய பரம பிதாவை வேண்டுகின்றோம்.

**தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், உறுப்பினர்கள், ஊழியர்கள், தொண்டர்கள்.**

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்-கிளை.**

(78374)

## பால்மா வகைகளுக்கு செயலகத்தால் விலை நிர்ணயம்

யாழ்.மாவட்டத்திற்குச் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள பால்மா வகைகளுக்கு யாழ்.செயலகத்தால் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

அங்கர், லக்ஸ் பிறே ஆகிய பால்மா வகைகளே கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஒரு பைக்கெற் அங்கர் பால்மா 280 ரூபாவாகவும், ஒரு பைக்கெற் லக்ஸ் பிறேபால்மா278ரூபாவாகவும் அரச அதிபரால் விலை நிர்ணயம்செய்யப்பட்டுள்ளன. (203)

## 7 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




நீர்வேலி வடக்கு, பரலோக மாதா கோயிலடியைச் சேர்ந்த
திரு.திருமதி செல்வநாயகம் அருமைநாயகி
தம்பதியரின் அருந்தவப் புதல்வன் **அனோஜ்**
இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை ஏழாவது
பிறந்தநினத்தை தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அம்மா, அப்பா, தொட்டப்பா,
தொட்டம்மா, அம்மம்மாமார்,
அம்மப்பாமார், அப்பம்மாமார்,
அப்பப்பாமார், தாத்தாமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார்,
அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார்,
மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார்,
அக்காமார், தம்பிமார், தங்கைமார்,
மருமக்கள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் பரலோக
அன்னையின் அருள்பெற்று,
பல்லாண்டு காலம் சீரும்,
சிறப்பும் பெற்று வாழ்கவென
வாழ்த்துகின்றனர்.

(78356)

## இதய அஞ்சலி

13.08.2008 அன்று காலமான,
எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி வி.சிவகுரு
அவர்களின் அன்பு மாமியார்
**அமரர் முத்துக்குமாரு**
**அன்னப்பிள்ளை**
அவர்களது மறைவிற்காக ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**
யா/மீசாலை விக்கினேஸ்வரா
மகா வித்தியாலயம்,
மீசாலை.

(78348)

## திருமறைக் கலாமன்றத்தில் கிராமியக் கலை அரங்கு

யாழ்ப்பாணம், செப்.12

திருமறைக்கலாமன்றத்தினரால் நடத்தப்படும் "கிராமியக்கலை அரங்கு" என்னும் கலை நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இணுவில், வட்டுக்கோட்டை, மாவைக்கலட்டி, தெல்லிப்பழை, நல்லூர், யாழ்.கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் வழங்கும், கோலாட்டம், காவடி, கரகம், வேப்பிலை ஆட்டம், குதிரை ஆட்டம், அம்பா, சிரட்டைக்கும்மி உட்பட பலகலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மூத்த நாடகக் கலைஞர் எஸ்.ரி.அரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமையாற்றும் திரு.வேதநாயகம் கோபாலசுந்தரம் (குமார்) அவர்களின் அன்பு மனைவி

### திருமதி குகதாம்பாள் கோபாலசுந்தரம்
### (இளைப்பாறிய ஆசிரியை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள், அலுவலர்கள்,**
**வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்,**
பருத்தித்துறை.

(78374)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை மகேந்திரன் (K.V.M.)
(உரிமையாளர், செந்தில் அச்சகம்)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகேந்திரன் 10.09.2008 புதன்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான தாமோதரம்பிள்ளை- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் செல்வக்குமார், கலாநிதி (கனடா), கேமலதா (கனடா), யமுனா (கனடா), பிரபாஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிகுமாரி, சத்தியானந்தன், ஜெயசகுந்தன், தவாசன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"லாவண்யம்",
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
தொ.பே.:
இந்தியா - 0091-9791069829
கனடா - 001416 7550249.

தகவல்:
இராசநாயகம்
குடும்பம்.

(78370)

### திருமதி குகதாம்பாள் கோபாலசுந்தரம்
(இளைப்பாறிய சங்கீத ஆசிரியை)

30/15, கனகரட்ணம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகதாம்பாள் கோபாலசுந்தரம் 10.09.2008 அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி- கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேதநாயகம்- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கோபாலசுந்தரம் (குமார்) (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணேசா மற்றும் சுபாசினி (பிரான்ஸ்), கந்தா (லண்டன்), உருத்திரா (துபாய்) ஆகியோரின் அன்புத் தாயும் ஸ்ரீதர் (பிரான்ஸ்), சுஜாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கணேசா, அஜ்சின், சங்கரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை 11.30 மணியளவில் சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/15, கனகரட்ணம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வே.கோபாலசுந்தரம்
(குமார்- கணவர்),

(78373)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ்.கிளையின் ஆளுநர் சபையின்
அங்கத்தவரும் யாழ்.பிரிவின்
பொருளாளருமாகிய
**திருமதி ஞானமணி ஆசீர்வாதம்**
அவர்களின் அன்புக் கணவர்
**யோசப் ஆசீர்வாதம்**
அவர்களின் திடீர் மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
பிரிவின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்மா
நித்திய இளைப்பாற்றை பெற சகல
வல்லமையுடைய பரமபிதாவை
வேண்டுகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ்.பிரிவு.

(78377)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி பூமலர் கணேசு

**வாழ்விற்கோர் விடியலாய் நல்வழி காட்டியாய்**
**வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய உத்தமியே!**
**விண்ணுலக வாழ்விற்கு விரைந்து சென்றதேனோ!**
**எங்கள் நினைவுகளில் என்றும் நின்று நிழலோடு**
**நிஜமாக நிற்கும் எங்கள் அன்புத் தெய்வமே!**
**மாதமொன்றென்ன ஆண்டுகள் பல சென்றாலும்**
**எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்**
**எம் நெஞ்சை விட்டகலாது விழித்திரையில் நீர்த்திரளாய்**
**உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்வோம்.**

*13.08.2008 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

தகவல்: குடும்பத்தினர்.
சின்னத்தம்பி கணேசு (கணவர்),
(முன்னாள் ஒய்வுபெற்ற ஊழியர், மின்கம்பி இணைப்பாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்).

பிரதான வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(78372)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன
யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில்
கடமையாற்றும்
**செல்வி ஆ.வலயட்**
அவர்களின் பாசமிகு தந்தை
**யோசப் ஆசீர்வாதம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்வதுடன், அவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும், சக ஊழியர்களும்,**
பிராந்திய காரியாலயம் (வடக்கு),
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(ஏ/554608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலாண்டோ அரைச்சதத்தைக் கடந்தார் சஞ்சீவராஜ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்

## இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது பற்றிக்ஸ்


மிலாண்டோ


சஞ்சீவராஜ்

வலி.வடக்கு,செப்.12

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களான மிலாண்டோ பெற்றுக் கொண்ட 65 ஓட்டங்களும், சஞ்சீவராஜ் வீழ்த்திய ஐந்து விக்கெட்டுகளும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணியினரை இறுதிப் போட்டியில் விளையாட வழிசமைத்துள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் 38 ஓட்டங்களினால் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுகளை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

மிலாண்டோ 65 பந்துகளில் எட்டு நான்குகள், ஒரு ஆறுடன் 65 ஓட்டங்களையும், நவதீபன் 52 பந்துகளில் ஐந்து நான்குகள், ஒரு ஆறுடன் 41 ஓட்டங்களையும், ரஜீல்சன் 40 பந்துகளில் ஒரு ஆறு இரண்டு நான்குகளுடன் 28 ஓட்டங்களையும், மனோஜ் மூன்று நான்குகளுடன் 20 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய கஜீவன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 46 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், அலெக்ஸ் டியோன் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், விதுசன் 07 ஓவர்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், மதுசன் 04 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜெருசன் 02 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

226 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 32.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

விதுஷன் 46 பந்துகளில் இரண்டு நான்குகளுடன் 16, ஹரிகரன் 21 பந்துகளில் மூன்று நான்குகளுடன் 14, பிரணவன் 15 பந்துகளில் இரண்டு நான்குகளுடன்12, கஜீபன் 19 பந்துகளில் இரண்டு நான்குகளுடன் 11 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்ப்பில் பந்து வீசிய சஞ்சீவராஜ் 4.3 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 7 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டையும், சஜீந்திரன் 6 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், எறிக் பிரதாபன் 7 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், மிலாண்டோ 5 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், கோகுலன் 4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(50-86)

# தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கமும் இணைந்து நடத்தும் எஸ்.தனபாலன் ஞாபகார்த்த 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணத்தில் உள்ள 12 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

இந்தப் போட்டியின் ஆரம்ப வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அணிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் சென்.ஜோன்ஸ் மைதானத்திலும் சென்.பற்றிக்ஸ் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

போட்டியின் அரையிறுதியாட்டம், இறுதியாட்டம் என்பன சென்.ஜோன்ஸ் மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் எனவும் பரிசளிப்பு வைபவம் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (50)

# பற்றிக்ஸின் விக்கெட்டுகளை மதுசன் பிடுங்கினார் போராடித் தோற்றது யாழ்ப்பாணக் கல்லூரி

வலி.வடக்கு,செப்.12

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் 15 வயதுப் பிரிவினருக்கிடையே நடத்தப்படும் கிரிக்கெட் போட்டி ஆட்டத்தின் 'சுப்பர் சிக்ஸ்' போட்டியொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 09 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 31ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ரியூடர் 65 பந்துகளில் ஒரு நான்குடன் 21 ஓட்டங்களையும், சுகிர்தன் 27 பந்துகளில் ஒரு நான்குடன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 25 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரி சாா்பில் பந்துவீசிய எம்.மதுசன் 10 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுகளையும், கோபிநாத் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், பவகுகன் 07 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

மிகவும் குறைந்த எண்ணிக்கையான 77 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரியினால் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுத்து வெற்றி இலக்கை அடையமுடியவில்லை.

யாழ்ப்பாணக் கல்லூரி 35.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 67 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.


மதுசன்

எம்.மதுசன் 32 பந்துகளில் மூன்று நான்குகளுடன் 17 ஓட்டங்களையும் தினேசியன் 59 பந்துகளில் ஒரு நான்குகளுடன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய தேவநாதன் 4.4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும், நோபேட் 10 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், கபாஸ்கரன் 10 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், குகபாலா 06 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், நிதர்சன் 02 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# சஜீந்திரன் ஆறு விக்கெட்டுகளைச் சாய்க்க கனகரத்தினம் ம.வியை வென்றது பற்றிக்ஸ்

வலி.வடக்கு,செப்.12


சஜீந்திரன்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 09 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 13.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

எனோஜன் இரண்டு நான்குகளுடன் 15 ஓட்டங்களையும் காண்டீபன் ஒரு நான்குடன் 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 06 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய சஜீந்திரன் 6.2 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுகளையும், ஜெரி ஜோன்சன் 05 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

மிகவும் குறைந்த ஓட்ட எண்ணிக்கையான 40 வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 7.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

பிரசாத் மூன்று நான்குகளுடன் 13 ஓட்டங்களையும், திலக்சன், ஜெரிஜோன்சன் ஆட்டமிழக்காது முறையே 08, 03 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் சார்பில் பந்துவீசிய மொறின் 03 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். (50-86)




# 121 பந்துகளில் 133 ஓட்டங்களை விளாசினார் இராகுலன் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் மகாஜனவை வென்றது யூனியன்

வலி.வடக்கு,செப்.12


இராகுலன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீரன் இராகுலன்15 வயதுப் பிரிவினருக்கான 'சுப்பர் சிக்ஸ்'கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் 121 பந்துகளில் 133 ஓட்டங்களைப் பெற்று இந்தப் போட்டியொன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான 'சுப்பர்சிக்ஸ்' போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 06 விக்கெட்டுகளினாலும் 196 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுகளை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது.

இராகுலன் 121 பந்துகளில் பதினேழு நான்குகள், நான்கு ஆறுகளுடன் 133 ஓட்டங்களையும் பானுஜன் 126 பந்துகளில் பத்து நான்குகள், ஒரு ஆறுடன் 69 ஓட்டங்களையும், அனுசியன் 19 பந்துகளில் ஐந்து நான்குகளுடன் 25 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 39 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்துவீசிய மோசிகீரன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 33 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் திலக்சன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 37 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

282 என்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் 30.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

சஞ்சயன் 34 பந்துகளில் நான்கு நான்குகளுடன் 21, பிரசன்னா 19 பந்துகளில் இரண்டு நான்குகளுடன் 12, திலக்சன் இரண்டு நான்குகளுடன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரி சார்பில் பந்துவீசிய இராகுலன் ஆரம்ப பந்துவீச்சாளராகக் களமிறங்கித் தனது 4ஆவது பந்தில் முதலாவது விக்கெட்டைக் கைப்பற்றியதுடன் 05 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 02 விக்கெட்டுகளையும், சிலோஜன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜோய் கிறேசியன் 08 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பானுசன் 06 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும், சாய்ராம் 1.2 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IIS CITY CAMPUS

New batch starts on 14.09.2008 @ 10.00 a.m.

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iisco@sltnet.lk
Web: www.iiscitycampus.com

# What Next?......After A/L

## Obtain a World Class British Qualification

BTEC edexcel INTERNATIONAL **HND**

in Computing (General)
in Computing (ICT System Support)
in Computing (Software Development)



*Delivered locally.........*
*Recognized globally......*

| | |
|---|---|
| B.Sc.(Hons) 1 Year at leading Universities in UK, USA, Australia, Canada etc | 3rd Year |
| BTEC HND Computing (General) / Computing (ICT System Support) Computing (Software Development) | 2nd Year |
| BTEC HNC Computing | 1st Year |
| G.C.E A/L with 2 Subjects | |


S.[illegible]
[illegible]

யாழ். பரியோவான் கல்லூரி மாணவனாகிய நான் 2006ம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி இருந்தேன். உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியளிக்காத காரணத்தால் பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிட்டேன். எனது தந்தையின் வழிகாட்டலுக்கமைய IIS City Campus நிறுவனத்தின் HND கற்கைநெறியில் இணைந்து கொண்டேன். எனது சிரேஷ்ட மாணவர்கள் சிலரும் இக்கற்கைநெறியில் இணைந்து தமது 'கல்வி இலக்கில் வெற்றியடைந்து வெளிநாடுகளில் உயர்கல்வியை தொடர்வதை அறிந்திருந்தமைக்கு எனது எதிர்காலம் தொடர்பாக முழுமையான நம்பிக்கை ஏற்பட்டது.

நான் மேற்படி கற்கைநெறியைத் தொடர்ந்த காலம் மிகவும் இடர்கள் சூழ்ந்த காலமாக இருந்தபோதிலும் எமது பயிற்சிநெறியில் எவ்வித தடங்கலும் இன்றி உரியநேரத்தில் பூர்த்தி செய்து கொள்ள நிறுவனம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அதன் பயனாக குறிப்பிட்ட காலத்தில் பிரித்தானிய Edexcel நிறுவனத்தின் HND சான்றிதழைப் பெற்றுக் கொண்டேன். மேலும் IIS City Campus நிறுவனத்தின் வழிகாட்டலுக்கமைய எனது இறுதியாண்டு பட்டக்கல்வியை லண்டனில் உள்ள Middlesex பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்கு விண்ணப்பித்து இலகுவாக அனுமதியையும் விசாவையும் பெற்றுக்கொண்டு தற்பொழுது Middlesex பல்கலைக்கழகத்தில் B.Sc. in Computer Science கற்கைநெறியைத் தொடர்கின்றேன்.

என்னைப்போன்று உயர்கல்விக்காக ஏங்கும் ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு IIS City Campus நிறுவனம் ஓர் சிறந்த வழிகாட்டியாகும்.

Edexcel International 'A' rated centre for the 4th consecutive year


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

12.09.2008

## சண்முகநாதன் சசிதரன்


(லொறி உரிமையாளர் P.S.N., மீசாலை வடக்கு, கொடிகாமம்)

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே!
ஆண்டு ஒன்று என்ன, நூறாயினும்
எங்கள் மனதில் இருந்து உன்
நினைவுகள் அகலாது

உன் மனைவி உன்னைக் காணாது
நிலை தடுமாறி நிற்கின்றாள்
உன் பாச மகள் தினமும்
அப்பா எங்கே என்று அழுகின்றாள்

உன்னைப் பெற்றவர்கள் நித்தமும்
கண்ணீர் வடிக்கின்றார்கள்
உன் உடன் பிறப்புக்கள் பத்தும்
வெளிநாட்டிலும் உள்நாட்டிலும்
முகம் வாடி நிற்கின்றார்கள்

உன் இழப்பை எங்களால் ஈடுசெய்ய
முடியவில்லை நீ இல்லாது எங்கள் குடும்பம்
இருள் சூழ்ந்த கருமேகம் போல் உள்ளது.



அன்னை மடியில்
10.01.1972

ஆண்டவன் அணைப்பில்
25.08.2007

தகவல்:
சண்முகநாதன் குடும்பம் (P.S.N.),
ச.துவாரகாதேவி (மனைவி)
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(77698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த செலவுடன் கூடிய வருமானம் ஈட்டும் சுய தொழில் வாய்ப்பாக மாறிவரும் கோழிவளர்ப்பு

காரைநகர் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவினால் மானிய அடிப் படையில் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள்



வழங்கப்பட்டு வருகின்றன.

கால்நடை அபிவிருத்தி உத்தியோகத் தரின் சிபார்சுக்கமைய ஒவ்வொரு குடும் பத்திற்கும் மானிய விலையில் ஐம்பது ரூபா வீதம் முப்பது குஞ்சுகள் வழங்கப்ப டுகின்றது. காரைநகரில் பெரும்பாலான குடும்பங்கள் சுயதொழில் முயற்சியாக இந்த ஒருநாள் கோழிக்குஞ்சுகளை ஆர்வத் துடன் வாங்கி வளர்ப்பதனை காண முடிகின்றது. இந்த சுயதொழில் ஊக்குவிப் பிற்காக காரைநகரில் உள்ள சமுர்த்தி வங்கி, கிராமிய வங்கி, இலங்கை வங்கி




என்பன குறைந்த வட்டிவீதத்தில் சுய தொழில் கடன்களை வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகின்றன.

இந்த கோழி வளர்ப்பினை காரைநகர் பிரதேச மக்களிடையே ஊக்குவிக்கும் வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு கால்நடை அபிவிருத்தி அலுவலர் என்.விவேகானந்தரிடம் கோழி வளர்ப்பு பற்றி கேட்ட போது அவர் தெரி வித்த கருத்துக்கள் வருமாறு:-

கோழி வளர்ப்பு என்பது பண்டைய காலந்தொட்டு எம்மக்களால் மேற்கொள் ளப்பட்டுவரும் ஒரு வருமானம் தரும் முயற்சியாகும். எனினும் இதனை ஒரு தொழில் முயற்சியாக எம் மக்கள் மேற் கொள்ள ஆரம்பித்து சில தசாப்தங்களே ஆகியுள்ளன.

கொல்லைப்புறக் கோழி வளர்ப்பை நோக்கினோம் எனில் இதில் பல அனுகூலங் களும், பிரதிகூலங்களும் காணப்படுகின் றன. நாட்டுக்கோழி இனங்கள் இறைச்சிக் காக அல்லது முட்டைக்காக வளர்க்கப் பட்டு வருகின்றன. நோக்கம் எதுவாக இருப்பினும் பொதுவாகப் பேட்டுக் கோழி கள் குறித்த காலம் வரை முட்டைக்காக வும் பின்னர் இறைச்சிக்காகவும் பயன்பட் டன. சேவல்கள் முதலில் இனப்பெருப்பத் தேவைக் காகவும் பின் இறைச்சிக்கும் பயன்பட்டன. அத்தோடு ஒரு சில இனங்கள் அழகிற் காகவும் வேறு சில இனங் கள் சண்டைக்காகவும் மக்க ளின் பொழுது போக்கு தேவை யைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் வளர்க்கப்படு கின்றன.

மனித வாழ்வின் ஒரு பகுதியாக ஓர் வீட்டு முற்றத் தின் ஓர் முக்கிய அங்கமான கோழிகள் குஞ்சுகளுடன் உலாவருவதை கிராமங்களில் இன்றும் காணலாம். இக் கோழிகள் தமது உண வைத் தாமே தேடிக் கொள்ளும் ஆற்றல் உடையவை. நாளொன்றில் அவை உண விற்காக ஓர் குறுகிய இடப்பரப்பு தொடக் கம் பல கிலோ மீற்றர்கள்வரை நடந்து திரிகின்றன. இயற்கையாகக் கிடைக்கும் பச்சைத் தாவரங்கள், விதைகள், பழங்கள், பூச்சிகள், புழுக்கள் என இரசாயனப் பொருள் கள் கலப்பற்ற உணவை உண்டு சுவையு டன் வாசனையும் கொண்ட சத்து மிகுந்த முட்டையையும், இறைச்சியையும் எமக்கு வழங்கு கின்றன.


மனிதனின் உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் புரதச்சத்து இன்றியமை யா தது. தாவரங்களில் இருந்து பெறப்படும் புரத உணவினை விட விலங்குப் புரத உணவு தரத்திலும், சுவையிலும் சிறந்தது. இன்றைய எமது நாட்டின் நிலைமை காரணமாக தற்பொழுது கடலில் இருந்து பெறப்படும் உணவு அளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. வரு மானம் குறைந்த மக்கள் கால்நடைகளில் (ஆடு, மாடு) இருந்து பெறப்படும் இறைச்சியினை அதிக விலை கொடுத்து உட்கொள்ள முடியாது உள்ளனர். இதனால் மக்களிடையே புரத போசாக்கு குறைபாடு அதிகளவில் ஏற்பட்டுள்ளது. எனவே இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்வ தற்கு வீடுகளில் கொல்லைப்புறக் கோழி வளர்ப்பினைமேற்கொள் வதன் மூலம் மிகக் குறைந்த செலவில் எந்நேரத்திலும் இறைச் சியையும் முட்டையையும் பெற்றுக் கொள் ளலாம்.

கொல்லைப்புறக் கோழிவளர்ப்பின் அனுகூலங்களைப் பார்ப்போமானால் மற் றைய கால்நடைகளுடன் ஒப்பிடும் பொ ழுது உணவினை பயன்தரக்கூடிய முறை யில் விலங்குப்புரதமாக மாற்றும் தன்மை யுடையது. மூலதனச் செலவு குறைவு அதாவது இரவில் மட்டும் கோழி கள் தங்கு வதற்கு சிறிய அளவினை உடைய பனை மட்டையிலான கூடுகளோ அல்லது கம்பி வலைக் கூடுகளோ பயன் படுத்தலாம் இத னால் கூடு அமைப்பதற்கு அதிக செலவு ஏற்படாது. பண்ணைக் கோழி வளர்ப்பில் 60 தொடக்கம் 70 வீதம் உணவிற்கு பயன் படுகின்றன. அத்துடன் தற்போதைய நாட்டு நிலைமையில் தொடர்ந்து உண வினைப் பெறுவதில் சிரமத்தினை எதிர் கொள்வதாலும் வீட்டுக் கழிவுகளையும் செலவின்றியே உணவுகளையும் பயன்

## கோழி இறைச்சி, முட்டை என்பன சிறந்த விலங்குப்புரத உணவுகள்

படுத்தி கொல்லைப்புறக் கோழிகளை வளர்ப்பதன் மூலம் செலவினைக் குறைக் கலாம்.

நீர், உணவு வழங்குவதற்கு மலிவான உபகரணங்களைப் பயன்படுத்தலாம். முட்டையினை அடைக்கோழியினைப் பயன்படுத்தி பொரிக்க வைத்து குஞ்சுகள் பெறப்படுவதனால் குஞ்சுகள் வாங்குவ தற்குரிய செலவு குறைவு, கோழி இறைச்சி எல்லா இன மத மக்களாலும் விரும்பி உண்ணப்படும் உணவாகும். நாட்டுக் கோழி இறைச்சி, முட்டை என்பன சுவை



யானது. கோழிகள் விரைவில் வளர்ச் சியடைந்து இனப் பெருக்கக் கூடியன. நெடுநாள் சுகவீனமுற்றிருந்து தேறிய வர்க்ள், மகப்பேறடைந்த பெண்கள் பல வீனம் அகற்றுவதற்கு ஊர்கோழிச் சூப் பயன்படுகின்றது.

அடுத்து கோழி வளர்ப்பிற்கான கூட மைப்பினை நோக்குமிடத்து கூடுகளை அமைக்கும் போது நல்ல காற்றோட்டம் பிரதானமாக கவனிக்க வேண்டிய அம்ச மாகும். நல்ல காற்றோட்டத்தை ஏற்படுத் துவதன் மூலம் கூட்டினுள் கோழிகள் சுவாசிப்பதற்கு ஏற்ற வளி, கிடைக்கும். கூட்டினுள் வெப்புநிலை கூடியளவிற்கு குறைக்கப்படும். கோழிகள் எச்சத்தில் இருந்து உருவாகும் அமோனியா, ஐதரசன் சல்பைற் போன்ற நச்சுவாயுக்கள் உடனுக் குடன் கூட்டிலிருந்து அகற்றப்படும். கூட்டின் அடிப்பகுதி ஈரமிலிப்பின்றி உலர்ந்ததாகப் பேணப்படுவதனால் நுண் ணங்கிகள் மற்றும் நோய்க்கிருமிகள் பெருக்கம் தடுக்கப்படும். கூட்டினுக்குளே அடித்தளத்தில் உமி, மரச்சீவல் வெட்டப் பட்ட வைக்கோல் என்பவற்றைப் பயன் படுத்தலாம்.

கொல்லைப்புறக் கோழியானது மனித னால் கழிக்கப்படுகின்ற உணவினை உண்டு மனிதனுக்கு தேவையான போசாக்கு நிறைந்த உணவினை அதாவது முட்டை, இறைச்சியினைவழங்குகின்றது. சுயதேவை அடிப்படையில் சிறிய அள வில் வளர்க்கப் படும் கோழிகள் தனது உணவினைத் தானே தேடி உண்ணும் சந்தர்ப்பங்களில் வருடம் ஒன்றுக்கு 30-60 முட்டைகள் இடும். ஆனால் வீட்டில் உருவாகும் சமையல் அறைக்கழிவுகளையும், செலவு குறைந்த உணவுகளையும் மேலதிகமாக வழங்கு வதன் மூலம் 120-150 முட்டைகள் பெற லாம்.

குஞ்சுகளிற்கு அரிசிக்குறுணல், கறை யான், அவித்த மீன் என்பவற்றையும், வளர்ந்த குஞ்சுகளிற்கும் கோழிகளுக்கும் தவிடு, கஞ்சி, மரவள்ளிக்கிழங்கு, நெல், சப்பிநெல், வீட்டில் எஞ்சும் உணவுகள் தேங்காய்ப்பிண்ணாக்கு, எள்ளுப்பிண் ணாக்கு மனிதரின் உணவுக்கு பயன்பட முடியாத கடலை, உழுந்து, பருப்பு, சோயா, அவரை, உழுத்தம்கோது மற்றும் இலை வகைகளையும் உணவாகப் பயன்படுத் தலாம்.

கோழிகள் ஒருநாளிற்கு 12 மணித் தியாலங்கள் உணவு உண்ணும் போது கூடிய முட்டை உற்பத்தி செய்கின்றன.

எனவே காலை 6 மணிக்கு திறந்து விட்டு இருண்ட பின்னர் அடைப்பதுடன் செல வின்றிப் பெறக்கூடிய உணவுப் பொருள் களை ஒரு நாளிற்கு ஒரு கோழிக்கு 50-70 கிறாம் வீதம் வழங்கல் வேண்டும். எல்லாச் சத்துள்ள உணவுகளையும் கலந்து நிறை உணவாக வழங்க வேண்டும்.

நோய் வருமுன் காப்பது சாலச்சிறந்தது. எனவே மூன்று வகையான தொற்று நோய் களுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கையானது எல்லா வயதுடைய (குஞ்சு ளுக்கும் கோழிகளுக்கும்) மேற்கொள் ளுதல் வேண்டும்.

நீண்ட காலமாக மக்க ளால் மேற்கொள்ளப்பட்டு வரும் கோழி வளர்ப்பில் மிகக் கூடிய பாதிப்பினை ஏற்படுத் துவது நோயாகும். நோயின் தாக்கத்தினால் கோழி களின் வளர்ச்சி குன்றுவதுடன் அப் பிரதேசம் முழுவதும் பரவ லடைவதுடன்பெரும்எண்ணிக் கையான கோழிகள் அழிந்து விடுகின்றன. நோய்க் கெதி ரான தடுப்பு நடவடிக் கைகள் மக்களால் மேற்கொள்ளப் படாமையினாலே இப்பாதிப்பு ஏற்படு கின்றது. நோய்க் கெதிரான தடுப்பு நட வடிக்கை யானது பிரதேச கால்நடை வைத் திய நிலை யங்களில் மேற்கொள்ளப் படுகின்றது.

பிறந்த 14 ஆம் நாள் கம்போறோ 1 தடுப்பு மருந்தும் 21 ஆம் நாள் இறணிக்கற்

**கோபாலன்**

தடுப்பு மருந்தும் 35 ஆம் நாள் கம்போறோ 11 தடுப்பு மருந்தும், 8 தொடக்கம் 10 வாரங்களில் அம்மை 1 தடுப்பு மருந்தும் 10 தொடக் கம் 12 ஆம் வாரத்தில் இறணிக்கற் தடுப்பு மருந்தும் 4 ஆம் மாதம் அம்மை 11 தடுப்பு மருந்தும் ஏற்றல் வேண்டும்.

3 ஆம் மாதம் இறணிக்கற் தடை ஊசியாக ஏற்றினால் 6 மாதத்திற்கு ஒரு முறையும் 2 ஆவது அம்மை ஊசி ஏற்றிய பின்னர் ஒரு வருடத்திற்கு ஒரு தடவை யும் ஏற்றுதல் வேண்டும்.

நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு வேறு இடங்களில் இருந்து கோழிகள் வாங்கி னால் இரண்டு கிழமைகளுக்கு மற்றைய கோழிகளுடன் சேர்க்காது தனியான இடத் தில் வைத்தல், உரிய காலத்தில் தடுப்பு மருந்துகள் வழங்குதல், கோழிக்கூட்டில் இரவில் தங்குவதற்கு போதிய இடவசதி வழங்கல், கூடு போதிய காற்றோட்டம் உள்ளதாக இருத் தல், பகலில் சூரிய ஒளிப டுதல் , தூய சமநிலையான உணவும் போதி யளவு துப்பரவான நீரும் வழங் குதல், உணவு, நீர் வழங்கும் பாத்திரங்கள் ஒவ் வொருநாளும் தொற்று நீக்கி பயன் படுத்திக் கழுவுதல், கோழிகளில் நோயின் அறிகுறி காணப்பட்டால் உடனடியாக கோழி யினைத் தனிமைப்படுத்தல் வேண்டும். அத்துடன் கால்நடை வைத் தியரை நாடி சிகிச்சை அளித்தல் வேண் டும். இவ்வாறு மேற்கொள்வதன் மூலம் நோய் ஏற்படாமல் தடுக்க முடியும் என்றார்.

## வாசகர் திருமுகம்

### நிரந்தர நியமனம் கிடைக்குமா?

இன்றைய காலகட்டத்தில் யாழ்.குடா நாட்டில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவது யாவரும் அறிந்ததே. எந்தவொரு கல்விசார் நிகழ்ச்சியிலும் ஆங்கிலக் கல்வியின் அவசியமும் அக்கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் விரிவாக எடுத்தியம்பப்படுகிற போதிலும் சம்பந்தப்பட்ட கல்வியதிகாரிகள் பாராமுகமாக இருப்பதுகவலைக்குரிய விடயமாகும்.

H.N.D.E கற்கை நெறியானது, ஆங்கில மொழியை வலுப்படுத்துவதற்கு ஓர் வரப் பிரசாதமாகும். இந் நெறியானது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முதலாம் வருடப் பாடத்திட்டத்தையும், GAQவின் Literature in English, Linguistics ஆகியவற்றின் ஒருகுறிப்பிட்ட சில பகுதிகளையும் உள்ளடக்கிய கற்கை நெறியாகும்.

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர்தேசிய ஆங்கில டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த மாணவர்கள் எந்தவித நிரந்தர நியமனங்களுமின்றி பல வருடங்களாகப் பரிதவிக்கும் நிலையைக் கண்கூடாகக் காணமுடிகிறது. ஆனால் வடமேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு வருடமும் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தோருக்கு நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறாக மேற்குறிப்பிட்ட மாகாணங்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படு கின்ற போதும் வட மாகாணத்தில் இக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தோருக்கு நியம னங்கள் வழங்கப்படாததுஏன்?

யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் ஆங்கில டிப்ளோமாப் பட்டதாரிகள் சேவை மனப் பான்மையுடன் நாளொன்றிற்கு 80/= என்ற வேதனத்துடன் ஒப்பந்த அடிப்படை யில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமை புரிந்து வருகின்றார்கள். இவர்கள் எவ்வளவு காலத்திற்கு குறைந்த ஊதியத்துடன் தங்களது சேவையைத் தொடர முடியும்?

இப்படியாக ஆங்கிலமொழியின் முன்னேற்றத்திற்காக தங்களை அர்ப்பணிக்கும் டிப் ளோமாப் பட்டதாரிகள் நிரந்தர நியமனங்களின்றித் தவித்துக் கொண்டிருக்கும்வேளை, வட மேல் மாகாணத்தில் சமீபத்தில் டிப்ளோமாதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறாக நியமனம் பெற்றவர்களில் ஆசிரியர் சேவையில் 3-IIதரத்திற்கு உள்வாங் கப்பட்டார்கள். அவர்களின் சம்பள அளவுத் திட்டம் 13, 120-10x145-5x180-15470

இவ்வாறாக நிரந்தர ஆசிரியர் நியமனங்களை வட மாகாணத்திலும் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம். இதற்குரிய நடவடிக்கைகளை உரியவர்கள் [illegible] தருவார்கள் என நம்புகின்றோம்.

*யாழ்ப்பாணம்.* **பாதிக்கப்பட்ட மாணவர்கள்.**

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசா லைகளில் நடனபாடம் கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கும் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் நடன பாடம் கற்கும் மாணவர்களுக்குமான நடனபாட செயலமர்வும், செயற்பாட்டுப் [illegible] வெள்ளிக்கிழமை [illegible] சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,செப்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் சித்திரபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களு கான செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிரமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தின் கிராம அலுவலர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு மேலும் 111 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராமஅலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு மேலும் 111 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**நெடுந்தீவு**

ஜி.ஜெனி (அம்பலவாணர் வீதி, அத்தியடி), சி.மாலினி (மண்கும்பான், வேலணை).

**நல்லூர்**

வி.குலதுங்கன் ( கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு), வி.அருள்விந்தன் (அரியாலை மேற்கு), ஜி.அரவிந்தன் (சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை), ஏ.விஜிதா (சீனியர் வீதி, வண்ணார் பண்ணை), எஸ்.கே.தினேஸ்குமார் (பழைய தபாற்கந்தோர் வீதி, கோப்பாய்), ஜே.லினேஷ் (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு), ஆர்.பவித்திரா (ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு), வை.சுகன்பாபு (முதலாம் வீதி, நல்லூர்), எஸ்.விஜிதன் (செம்மணி வீதி, நல்லூர்), எஸ்.சசிகேசன் (வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு), என்.ரேணுகா (செபஸ்ரியன் வீதி, ஒட்டுமடம்).

ரி.தபேந்திரன் (ஏ.வி.வீதி, அரியாலை), எஸ்.வினோஜிதா (கோண்டாவில் வடக்கு), என்.லோகதர்ஷன் (கோண்டாவில் வீதி, கோண்டாவில் வடக்கு), பி.தங்கத்துரை (கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்), எம்.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கு), ஏ.கே.ஜனகா (வைமன் வீதி, நல்லூர்), எம்.ஜானேந்திரன் (பூநாரி லேன், கொக்குவில்).

**சங்கானை**

ரி.சுபேஷ் (அராலி வீதி, சங்கானை), கே.கோகுலன் (சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்), ஆர்.தட்சாயினி (பொன்னாலை மேற்கு, சுழிபுரம்), பி.பிரதீபா (வழக்கம்பரை, தொல்புரம்), எம்.உமாலினி (நாவற்குழி தெற்கு, கைதடி), வி.எஸ்.அசோகரட்ணம் (மூளாய், சுழிபுரம்), எஸ்.குமுதினி (பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்), என்.சிவரூபன் (சுழிபுரம் மத்தி, சுழிபுரம்), ஆர்.ஜெயமாலினி (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை), எஸ்.சிவகுமார் (மூளாய் தெற்கு, சுழிபுரம்), எம்.மயூதரன் (சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்).

**தெல்லிப்பழை**

எஸ்.சுபாகா (பாரதி வீதி, திருகோணமலை), என்.கிருஷாந்தினி (கல்வளை வீதி, சண்டிலிப்பாய்), பி.மரின் பெனிற்றா (சென்.ஜேம்ஸ் லேன், இளவாலை), பி.ஜனகன் (தோம்பை வீதி, உடுவில்), எம். கலைவிற் (பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு), எஸ்.ரட்ணகுமாரி (பிரான்பற்று, பண்டத்தரிப்பு), ஜெ.தவகுமார் (கோப்பாய் சந்தி, கோப்பாய்), ஆர்.வரதராஜன் (மாதகல் வடக்கு, மாதகல்), எஸ். சந்திரமதி (நவாலி தெற்கு, மானிப்பாய்), எஸ்.ரி. கஜேந்திரன் (தாவடி கிழக்கு, கொக்குவில்).

கே.பிரதீபா (நவாலி கிழக்கு, மானிப்பாய்), எஸ்.வை.ரதீபன் (கோணாவளை, வசாவிளான்), ஆர்.சுரேணுகா (உயரப்புலம், ஆனைக்கோட்டை), ஏ.அருள்ஜீவரட்ணம் (ஊரணி, காங்கேசன்துறை), யு.காயத்திரி (சுதுமலை மத்தி, மானிப்பாய்), வி.யோகமலர் (சாவற்கட்டு, மானிப்பாய்), என்.றூபலக்கி (கனகசபை வீதி, மானிப்பாய்), பி.வித்தியரூபி (ஐயனார் கோயிலடி, சண்டிலிப்பாய்), எஸ்.செல்வேந்திரன் (தாவடி தெற்கு, கொக்குவில்), எஸ். தவநேசமலர் (அளவெட்டி மத்தி, அளவெட்டி).

ரி.நாகசுபாதினி (இளவாலை, யாழ்ப்பாணம்), எஸ்.சக்திவேல் (சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு), ரி.மோகனகுமார் (ஆனைக்கோட்டை மேற்கு), வி.ஜெயமாறன் (பழைய வீதி, கோப்பாய் தெற்கு), பி.றஜிதா (கணேஸ்வரம், அளவெட்டி), ரி.சசிகா (பத்தாவத்தை, இளவாலை), ரி.ரதிகரன் (பத்தாவத்தை, இளவாலை), ஏ.நிஷாந்தன் (உரும்பிராய் கிழக்கு), ஏ.டி.சயிலையா (வசாவிளான் கிழக்கு, ஒட்டகப்புலம்), பி.பாலலேந்திரம் (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை).

வி.பிரதீபன் (மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை), வி.சஞ்ஜீவன் (ஏழாலை தெற்கு, ஏழாலை), ஜி.ஜொய்சி (உடுவில், சுன்னாகம்), கே.துவாரகன் (அளவெட்டி தெற்கு), எஸ். கிருஷ்ணசாந்தி (அளவெட்டி கிழக்கு), பி.பகீரதி (அளவெட்டி தெற்கு), எஸ்.செல்வரோகினி (தெல்லிப்பழை கிழக்கு, தம்பையாபுலம்), எஸ்.சிவானந்தன் (அளவெட்டி வடக்கு), பி.தீபன் (தையிட்டி வீதி, காங்கேசன்துறை), என்.ஜெயவிந்தன் (தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை).

கே.மஞ்சுவாஷினி (வீரபத்திரர் கோயிலடி, மல்லாகம்), என்.உமாகாந்தா (அளவெட்டி கிழக்கு, அளவெட்டி), எம்.விஜிதா (கட்டுத்துறை, மல்லாகம்), ஆர். விஜய் (இணுவில் கிழக்கு, இணுவில்), எஸ்.சுமந்திரன் (மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்), எப்.அன்ரனிரோய் (ஊறணி, காங்கேசன்துறை), எஸ்.ரேகா (மாக்கட் லேன், மானிப்பாய்), எஸ்.ஜீவகுமாரன் (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), எஸ்அனுராதன் (சித்தியம்புளியடி, தெல்லிப்பழை கிழக்கு), ஜி.ஜி.அஜந்தா (அளவெட்டி மத்தி, அளவெட்டி).

ஐ.இராகுலன் (கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை), ரி.லதாங்கி (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), எஸ்.சயூரிகா (மயிலணி வீதி, சுன்னாகம்), எம்.ஜெயந்தினி (மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை), எஸ்.நிஷாந்தன் (தாவடி தெற்கு, கொக்குவில்), ஜே.சசிகலா (பங்களா லேன், மல்லாகம்), எஸ்.தேனுஷா (வித்தகபுரம், தெல்லிப்பழை), கே.புருசோத்தமன் (தெல்லிப்பழை கிழக்கு, பெரியன்சீமா), ஏ.ஆர்.ஜெசிந்தா (அளவெட்டி கிழக்கு, அளவெட்டி), எஸ்.சாரங்கன்(அரசடி, அளவெட்டி வடக்கு), கே.அஜந்தன் (பன்னாலை, தெல்லிப்பழை), ஏ.சித்திரா (உதயநகர் மேற்கு, கிளிநொச்சி).

**கரவெட்டி**

வை.சசிகாந்தன் (57/2-A1 1/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு-6), என்.ஸ்ரீகுமார் (36, அராலி வீதி, சங்கானை), எஸ்.சத்தியபாலன் (32/1, பிரவுண் வீதி, நீராவியடி), எஸ்.தனுஜா (கரணவாய் தெற்கு, கரவெட்டி), கே.சந்திரமோகன் (இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி), என்.சிவதர்ஷன் (கரணவாய் கிழக்கு, கரவெட்டி), எஸ்.துசீதன் (கரவெட்டி வடக்கு, கரவெட்டி), பி.லலித் (கரவெட்டி கிழக்கு, கரவெட்டி), கே.பிரசாந்தன் (நெல்லியடி, கரவெட்டி), எம்.வாசுதேவன் (கரணவாய் மேற்கு, கரவெட்டி) .

கே.பிரேந்திரா (கரவெட்டி தெற்கு, கரவெட்டி), எஸ்.தயாளன் (கரணவாய், கரவெட்டி), கே.ஜெனத்மேனன் (கரணவாய் வடமேற்கு, வல்வெட்டித்துறை), எஸ்.பாரதிராஜ் (கரணவாய், கரவெட்டி), எஸ்.கரிகரன் (சமரபாகு, உடுப்பிட்டி), ரி.சுதர்தன் (உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை), எஸ்.இராஜசுதன் (கரணவாய், கரவெட்டி), கே.மகேந்தன் (துன்னாலை மேற்கு, கரவெட்டி).

நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.அரச அதிபர் தெரிவித்தார். (202)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி றஞ்சிதா கனகநாயகம்
அவர்களின் அன்பு மாமி
**திருமதி வெற்றிவேல் சோமாபதி**
அவர்களின் பிரிவு குறித்து அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ தாவடி இ.த.க.பாடசாலை.

(78339)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் நீண்ட காலமாக சங்கீத ஆசிரியையாக பணியாற்றிய
திருமதி யோ.செல்வநாயகம் அவர்களின் பாசமிகு தந்தை
**வ.இரத்தினம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி.

(78351)

வடக்கு ,கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடம்

நீகோட் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு 57 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்கள் அடங்கியதாக சுயவிவரப் பட்டியலைத் தயாரித்து 22.09.2008ஆம் திகதிக்கு முன்பதாக **பிரதித் திட்டப் பணிப்பாளர், நீகோட், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "**தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**கல்வித் தகைமை:**

*அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட*

அ) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (குடிசார் அல்லது கனிய அளவையியல்) அல்லது
ஆ) சட்டட நிர்மாண தொழில்நுட்ப சான்றிதழ் அத்துடன் 2 வருடங்களுக்கு குறையாத வேலைத்தள அனுபவம் அல்லது
இ) படவரைஞர் சான்றிதழ் அத்துடன் 2 வருடங்களுக்கு குறையாத வேலைத்தள அனுபவம் அல்லது
ஈ) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (குடிசார் அல்லது கனிய அளவையியல்)கற்கைநெறியில் இரண்டாம் வருடத்தை பூர்த்தி செய்தவர்கள்.

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/554585)

## கேள்வி அறிவித்தல்

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் துரித அபிவிருத்தித் திட்ட நிதியின் கீழ் நாவற்குழி மேற்கு பகுதியில் நீர் வடிகால் அமைப்பதற்கு பகிரங்கக் கேள்வி கோரப்படுகின்றது.

| தொ.இ. | வேலை விவரம் | ICTADதரம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01. | நீர் வடிகால் அமைத்தல் | M7 | 750.00 | 15000.00 |

01. மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
02. முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களை கொண்டிருத்தல் கூடாது.
03. ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்கப்படவேண்டும்.
04. கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்பட்டமைக்கான கடிதத்தையோ ஆணையாளர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பிரதேச செயலகம், தென்மராட்சியில் பெற்றுக்கொள்ளலாம்.
06. கேள்வி ஆவணங்களை 12.09.2008 தொடக்கம் 25.09.2008 பி.ப.1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
07. மூடிய கேள்விகளை **பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி** என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 29.09.2008ஆம் திகதி 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் நீர் வடிகால் அமைத்தலுக்கான கேள்வி எனக் குறிப்பிடல் வேண்டும்.
08. கேள்விகள் 30.09.2008 மு.ப.11.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் தினத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

**செ.சிறினிவாசன்,**
தலைவர்,
பிரதேச [illegible]

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

(சி/554586)

IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
www.idm.lk
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

BTEC Diploma Courses - UK
(International Diplomas - Edexcel International - UK)
- Diploma in Business Management
- Diploma in ICT
- Diploma in Computer & Network Technology
- Diploma in Computerized Accounting Packages
- Diploma in Electrical & Electronic Engineering

Certificate Courses
- Ms Office
- ICDL
- Vb.net
- Java
- PHP & MySQL
- Web Designing

ஆரம்பம்:
Batch 1- 08/09/2008 - 9.30am
Batch 2- 10/09/2008 - 1.30pm
Batch 3- 10/09/2008 - 1.30pm
Batch 4- 12/09/2008 - 9.30am

மாணவர்களுக்கு சர்வதேச தரத்துடனான சான்றிதழ்களை வழங்கும் நோக்கில் எம் நிறுவனம் உலகில் உள்ள பிரபல்யமான நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

216 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மானிப்பாய் ஒழுங்கை, மானிப்பாய்.
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
021-2229901

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உண்மையில் புதுடில்லி தூங்குகின்றதா? அல்லது பாசாங்கு பண்ணுகின்றதா?

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறுவது போல வவுனியாவில் பாதுகாப்புப் படையினரின் தலைமையகம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல், இலங்கை விவகாரத்தில் புதுடில்லித் தரப்பின் இரட்டை வேடத்தை - குட்டை - ஒரேயடியாக அம்பலப் படுத்திவிட்டது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் இலங்கை அரசுப் படைகளுக்கு இந்தியா வெறும் ஆயுதத் தளபாட மற்றும் தகவல் வசதிகளை மட்டும் வழங்கி உதவவில்லை, நேரடியாக ஆளணி உதவிகளையும் வழங்குகின்றது என்ற விடயத்தை அத்தாக்குதலில் இந்திய விமானப்படையின் சார்ஜன்ட் தரத் தொழில்நுட்பவியலாளர்கள் இருவர் காயமடைந்தமை நிரூபித்துவிட்டது.

ஏற்கனவே, ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் நகர்வுகள் பற்றிய தகவல்களை மிகத் துல்லியமாக இலங்கைக்கு வழங்கி, புலிகளின் கப்பல்களைத் தாக்கி அழிப்பதற்கு இலங்கைக் கடற்படைக்குப் பெரிதும் உதவி வந்த இந்தியா, வான் பரப்பிலும் புலிகளின் விமானப் பறப்புகள் பற்றிய தகவல்களை இலங்கைத் தரப்புக்குக் கனகச்சிதமாக வழங்கி உதவுவதில் அளப்பரிய பங்கு பணி ஆற்றி வருகின்றது என்பது இப்போது தெளிவாகியிருக்கின்றது.

இத்தகைய பணியில் இந்தியாவின் சுமார் 250 தொழில்நுட்பவியலாளர்கள் இலங்கைப் பாதுகாப்புத் தரப்புடன் சேர்ந்து இயங்குகின்றார்கள் என்று சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டாலும் கூட, இந்த எண்ணிக்கை நூறுக்கும் சற்றுக் குறைவு என்கின்றன வேறு தகவல்கள்.

இந்தியா வழங்கிய ராடார்களைப் பராமரிப்பதற்கு அவ்வப்போது ஒருசில தொழில்நுட்பவியலாளர்கள் இந்தியாவிலிருந்து வந்து போவதுடன் இந்தியாவின் பங்குபற்றுதல் இதில் முடிந்து விடுகிறது. அதற்கு அப்பால் எதுவும் இல்லை என்று இந்தியத் தரப்பில் சில சமாதானங்கள் இப்போது கூறப்பட்டாலும், இவ்விடயத்தில் இந்தியாவின் ஆழமான பங்களிப்பை வெறும் 'ராடர் பராமரிப்புடன்' அடங்கி விட்டதாகக் கருதிவிட முடியாது என்பதுதான் உள்வீட்டுக் கணிப்பாகும்.

சரி. இப்படி நேரடியாக இங்கு விடயங்களில் ஈடுபடும் இந்தியர்களின் எண்ணிக்கை எப்படியாயினும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் இத்தகைய தந்திரோபாய உதவிகளைக் கொழும்புக்கு வழங்குவதில் புதுடில்லிக்கு என்ன நியாயம் - காரணம் - உண்டு என்பதே ஈழத் தமிழர்கள் தரப்பில் எழுப்பப்படும் ஒரே கேள்வியாகும்.

'இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இராணுவத் தீர்வு சாத்தியமேயல்ல, பேச்சு மூலமான அமைதித் தீர்வு காண்பதே ஒரே வழி. அதைச் செய்யுங்கள்!' - என்று கொழும்பைப் பார்த்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிலிருந்து கொழும்புக்கான இந்தியத் தூதுவர் வரை, இந்தியத் தரப்பின் ஒவ்வொரு அதிகார பீடமும் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றன.

அந்தக் கருத்து உண்மையானது. யதார்த்தமானது. அதில் தவறு இல்லை.

ஆனாலும் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை செவிமடுக்காமல் -

அல்லது உதாசீனப்படுத்தி, புறந்தள்ளி, நிராகரித்து விட்டு -

தன்பாட்டில், தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தத்தைத் திணித்து, போர் வெறி சந்நதம் கொண்டு, அட்டகாசம் பண்ணுகின்றது கொழும்பு.

கடலில் புலிகளின் கப்பல்களின் நகர்வுகள் பற்றிய உளவுத் தகவல்களில் இருந்து வான் புலிகளின் பறப்புகள் பற்றிய முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் வரையான சகல விடயங்களையும் நேரடியாகத் தனது ஆளணிகளை வைத்து இலங்கைப் படைகளுக்கு வழங்கும் அளவுக்கு இந்த யுத்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கும் இந்தியாவுக்கு, அதன் அரசியல் தலைமை கூறுவதுபோல இந்த யுத்த நடவடிக்கைத் திட்டத்தைக் கைவிட்டு, தீர்வுக்கு சாத்தியமான ஒரே வழியான பேச்சு முயற்சிக்கு இலங்கை அரசுத் தலைமையைத் திருப்ப முடியாமல் இருக்கின்றது என்ற நிலைமை நம்பமுடியாததாக உள்ளது.

ஒன்றில் - இவ்வளவு உதவிகளையும் கொழும்புக்குச் செய்தும் கூட, அதனடிப்படையில் கூட, கொழும்பை நல்வழிப்படுத்த முடியாத அளவுக்கு, இந்தப் பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியாவின் இராஜதந்திரம் தோற்றுப்போய்விட்டது.

அல்லது - வெளியில் அமைதித் தீர்வே ஒரேவழி என்ற வாய்ப்பேச்சை, ஒரு 'பம்மாத்து' நடிப்பாக புது டில்லி வெளிப்படுத்திக்கொண்டு, மறுபுறத்தில் புலிகளை அழித்தொழிக்கும் ஓர் இரகசியத் திட்டச் செயற்பாட்டை இலங்கையுடன் சேர்ந்து புதுடில்லி முண்டுகொடுத்து முன்னெடுப்பதாக இருக்கவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்று அரங்கேறுவதாகவே ஈழத் தமிழர்கள் தரப்புக் கருத வேண்டிய நிலைமை உள்ளது.

இராணுவ ரீதியில் இந்தளவுக்கு கொழும்பு அரசுக்கு உதவி செய்து, அதில் நேரடியாகச் சம்பந்தப்படும் புதுடில்லி, இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதிப்பேச்சு மூலமான தீர்வே ஒரே மார்க்கம் என்று வெளிப்படையாகக் கூறிக்கொண்டு, அந்தச் செயன்முறைப் பாதைக்குக் கொழும்பைத் திருப்ப முடியாமல் - கையாலாகாத்தனத்தோடு இருப்பதுபோல் - காட்டிக் கொள்வதை நோக்கும்போது அப்படித்தான் சந்தேகம் தோன்றுகின்றது.

இலங்கை விடயத்தில் புதுடில்லி தூங்குகின்றதா? அல்லது தூங்குவது போலப் பாசாங்கு பண்ணுகின்றதா? புரியவில்லை.



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தேர்த்திருவிழாக் காட்சிகள்.
துர்க்கையம்மன் தேருக்கு எழுந்தருளுவதையும் பக்தர்களில் ஒரு பகுதியினரையும் பக்தர்களில் மூவர் ஒன்று சேர தூக்குக்காவடி எடுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## தெல்லிப்பழை துர்க்கையின் தேர்த்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள்

யாழ்ப்பாணம்,செப்.12

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தேர்த்திருவிழா நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தார்.

பக்தர்களின் அரோகரா கோஷம் மற்றும் பஜனை, தேவார பண்ணிசை என்பவற்றுடன் அம்பாள் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அம்பிகையின் அருளை வேண்டி ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

பக்தர்கள் தேர்த்திருவிழாவில் கலந்துகொள்வதற்கு வசதியாக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் தெல்லிப்பழை வரை விசேட போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றன. (203-86)

## சிறார்களுக்குப் பசுப்பால்

யாழ்ப்பாணம்,செப்.12

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சிறார்களுக்கு இலவச பசுப்பால் வழங்கும் திட்ட நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான 275 சிறார்களுக்கு பசுப்பால் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், கால்நடை வைத்தியர் சி.வசீகரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொள்வர். (202)

## இராமகிருஷ்ண சமிதியினரின் ஆன்மீக யாத்திரை

யாழ்ப்பாணம்,செப்.12

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினரின் ஏற்பாட்டில் ஆன்மீக யாத்திரை நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பயணம் கொழும்புத்துறை யோகர் சுவாமி சமாதி கோயில், கைதடி மார்க்கண்டு சுவாமி சமாதி கோயில், கைதடி மாதாஜி லிங்கேசுவரர் சமாதி கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், வல்லிபுர ஆழ்வார் கோயில் ஆகிய இடங்களில் நடைபெறும்.

இந்த யாத்திரிகையில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட, கலைப்பீட, மருத்துவபீட மாணவர்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் கலந்துகொள்வார்கள்.

## செல்வச்சந்நிதியில் நாளை சப்பரம்

யாழ்ப்பாணம்,செப்.12

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயச் சப்பரத் திருவிழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (203-86)

## காலங்கடந்த பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தென்மராட்சியில்

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்.மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகம் தென்மராட்சிப் பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான காலங்கடந்த பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ள இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றவுள்ள மக்களுக்கு ஆயத்த கட்ட சேவைகள் வழங்கப்படவுள்ளதால் பிரதேச செயலக பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் பலர் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## கரவெட்டிப் பிரதேசத்தில் தேநீர்ச்சாலைகள் சுகாதாரக் கேட்டுடன் இயங்குவதாக மக்கள் முறைப்பாடு

உடுப்பிட்டி,செப்.12

கரவெட்டிப் பிரதேசத்திலுள்ள தேநீர்ச்சாலைகளில் பல சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கரவெட்டி, நெல்லியடிச் சந்தியை அண்மித்த பகுதியிலுள்ள தேநீர்ச்சாலைகளிலேயே இந்நிலை அதிகம் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக்கடைகளில் பீடி, சுருட்டு, சிகரெட் போன்றவை தாராளமாக விற்பனை செய்யப்படுவதால் புகைத்தல் தாராளமாக இடம்பெறுகின்றது. அத்துடன் வெற்றிலை, பாக்கு போடுபவர்கள் கடையை அண்டிய பகுதியிலேயே துப்புவதால் அப்பிரதேசம் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் கவனமெடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-155)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

கரவெட்டி,செப்.12

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'மயில் ஏறிய சேவகன்' என்னும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவு நிகழ்த்துவார். (202-70-72-236)

## நிகழ்ச்சித்திட்ட உதவியாளருக்கு வினைத்திறன்காண் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.12

வடக்கு மாகாணசபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் கடமை புரியும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான வினைத் திறன்காண் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 20ஆம்திகதி நடைபெறவுள்ளது என்று மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் பரீட்சை இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறியுள்ளார். (203)

## குடாநாட்டின் ஆரம்பக்கல்வி மாணவர்களை மையமாக்கி புதிய கற்பித்தல் முறை அறிமுகம்

யாழ்ப்பாணம்,செப்.12

குடாநாட்டுப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றலை மையமாகக் கொண்டு புதிய கற்பித்தல் முறை அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

இந்த முறையில் செயல்திறன் உடைய கற்றல், சுயமதிப்பு, பன்முகப் படுத்தப்பட்ட நுண்ணறிவுத்தேர்ச்சி என்பன இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளன.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் திட்டத்திற்கான செயலமர்வுகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாவட்ட வளவாளர்களுக்கு ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை தயார்படுத்தியதும் இந்த செய்திட்டம் விரைவில் குடாநாட்டு பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (202-302)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 28 | 13.09.2008 சனிக்கிழமை |
| திதி: | திரயோதசி பி.ப. 03.34வரை |
| நட்சத்திரம் : | அவிட்டம் மு.இ. 11.13வரை |
| சுபநேரம் : | 03.03 - 04.33 |
| ராகுகாலம் : | 09.03 - 10.33 |

## தென்மராட்சிப் பிரதேசத்தின் கலை இலக்கியப் பெருவிழா

யாழ்ப்பாணம்,செப்.12

தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழா நாளை சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோயில் வீதியிலுள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஆ.பிரேம்சங்கர், யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

சாவகச்சேரி பஞ்சகிருபாலய மாணவிகளின் கிராமிய நடனம், தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் இசைவிருந்து, சி. ஜோன்சனின் காவடி ஆட்டம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய தேசிய கலை இலக்கியப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணபயம் நீக்கவல்லது தெய்வீக இறைநாம பஜனை ஒன்றே

எல்லாம் வல்ல இறைவனுக்கு பல நாமங்கள் உண்டு. அந்தத் தெய்வீக நாமங்களை இடையறாது உச்சரிப்பதன் மூலம் நாம் உண்மையில் நற்கதி அடையலாம். இறைநாம தெய்வீக பஜனை - கூட்டுப் பிரார்த்தனை செய்வதன் பயன் ஆன்ம ஈடேற்றமே. மலபந்தப்பட்டு உழலும் உயிரானது பக்குவமடைந்து வீடுபேற்றை அடைவதற்கு தெய்வீக நாமபஜனையே உண்மையில் வழிகோலவல்லது.

''நாமஞ் சொல்லுவோம், நமனை வெல்லுவோம்'' என்பது கொழும்புத் துறையூர் ஸ்ரீ சிவயோகர் சுவாமிகள் நல்வாக்கு. இறைநாம தெய்வீக பஜனை மக்களுக்கு இன்பந்தரவல்லது. நமக்கு வழிகாட்டியாகத் திகழும் நாயன்மார்களும் கூட இறைவன் நாமத்தைத் தினசரி உச்சரித்தே அற்புதங்கள் பலவற்றைச் செய்தனர்.

''தமிழோடிசைபாடல் மறந்தறியேன், உன் நாமம் என்நாவில் மறந்தறியேன்'' என்ற திருநாவுக்கரசரின் வாக்கு இங்கு நோக்கத்தக்கது.

நாவினுக்கருங்கலமாக விளங்கும் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தை இடையறாது ஓதி நாம் உய்திபெறலாம். நாம் எல்லோருமாகச் சேர்ந்து இறைவன் நாமத்தை பஜனை செய்தால் நிச்சயம் நிம்மதி, மன அமைதி கிடைக்கும். இறைவன் அருள் கிட்டும். ஆதிபராசக்தியான அன்னை பார்வதி தேவி கூட வாமபாகம் பெறுவதற்கு இறைநாம பஜனையையே வழியாகக் கொண்டு உய்தி பெற்றாள் என்பது வரலாறு.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்'' என்று திருநாவுக்கரசர் கூறியது போல் ''மரணப்பிரமாதம் நமக்கில்லையே'' என்று அருணகிரிநாதர் கூறியதுபோல் இறைவனின் அடியவர்களுக்கு யமபயம் நீக்கிவிடும்.




நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருக வேண்டுமானால், வாயே வாழ்த்துகண்டாய் என்று, அவன் நாமத்தை உச்சரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவனருளாலே அவன்தாள் வணங்கி சிவனருள் வாரிதியில் திளைக்க வேண்டுமாயின் தினசரி இறைநாம பஜனையே வழியாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் தம் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை இறைநாமபஜனையே கடவுளை அடையும் பாலம் என்பதாகும். ஆன்மாவானது லயப்பட்டு மன ஒருமைப்பாட்டுடன் இறைவன் வசப்படுவது இறைநாம பஜனையின் மூலம்தான்.

எமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் நாம் ஒன்று சேர்ந்து பஜனை - கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் இறைசக்தியை உள்ளத்தில் வேரூண்றச் செய்து மனப்பயம் நீங்கிச் சந்தோஷமான நல்வாழ்வு வாழ வழிவகுக்கின்றது. இறைவன் நாமத்தை உள்ளன்போடு - புனிதமாக தினசரி மூன்று நேரமும் (காலை - மதியம் - மாலை) உச்சரியுங்கள். சகலரது முகத்திலும் தெய்வீகம்,ஒளி, இலட்சுமி காட்சிதரும். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், படுக்கையிலும் என்றும் உள்ளன்போடு நினையுங்கள், தியானியுங்கள் சகலதும் நல்லபடியாக நடக்கும். நீங்கள் அந்த இன்பத்தை நிச்சயம் அனுபவிப்பீர்கள்.

எமக்கு மக்களைப் போற்றித், துதித்து வாழ்த்த வாயைத் தந்தது இறைவன். அவ்வாயால் மக்களை இன்சொல்லால், புனித சிரித்த முகத்துடன் போற்றி வாழ்த்த வேண்டும். அவ்வாயால் அவச்சத்தம் போடக்கூடாது. சிவச்சத்தமே இசைக்கப்பட வேண்டும். சாதனை செய்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் தெய்வீகம் வேரூன்றிச் சகலரும் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி கல்விச் - செல்வத்தில் சிறந்து நல்ல சந்தோஷமான வாழ்க்கை வாழவழிவகுக்கும் என்பது உண்மை.

சி.சி.வரதராசா

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் மழலையாய்
12 . 06 . 1979



விண்ணில் தெய்வமாய்
12 . 09 . 1995

**செல்வன் சிறீஸ்கந்தராஜா ரமேஷ்குமார்**

*(யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்)*

உன் இனிமையான மெதுவான பேச்சு
இன்னும் எங்கள் காதில் ஒலிக்கிறது
பாசமுள்ள உறவுகளைப் பரிதவிக்கவிட்டு
பாவியவன் பதினாறு வயதினிலே பறித்துவிட்டான்
நீ இந்த மண்ணை விட்டுப் போனாலும்
எம் இதயத்தை விட்டுப் போகவில்லை.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### முருகன் செல்லம்

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் செல்லம் 10.09.2008 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லர், பொன்னர், சின்னவர், கனகர், சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் தவமணி, தவத்துரை (கிளை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயும் சுப்பிரமணியம், பிரேமா, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்பு மாமியும் மோகனதாஸ் (கட்டார்), சிறிகாந்தன் (டென்மார்க்), காந்தரூபி, ஜெகதீஸ்வரன் (கொழும்பு), அகிலதீபன் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பித்தனை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவத்துரை (மகன்)
மோகனதாஸ் (பேரன்)

கலைவாணி வீதி,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

(78365)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.12

தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு ஐ.ஓ.எம்.நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங்கவுள்ளது.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202)

## நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

நல்லூர்,செப்.12

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலாசாரப் பெருவிழா எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் மூன்று அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மேற்கொண்டு வருகிறார். (203-111)

## காணி விற்பனைக்கு

**கம்பர்மலை, பாரதி வாசிகசாலைக்கு அண்மையில் வீடு கட்டுவதற்கு உகந்த 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: ம.இரத்தினசிகாமணி (குட்டிசேர்)**
*பாடசாலை வீதி, கொம்மந்தறை,*
*வல்வெட்டித்துறை.*

(சி/554606)

## தவறிவிட்டது

இல.73, மானிப்பாய்வீதி (ஜனசக்திக்கு அருகாமையில்), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. இரஞ்சிதமலர் இராமகிருஷ்ணன் என்பவருடைய தே.அ.அ (இல.607391084V), தொழில் அ.அட்டை என்பன நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (78361)

## மணமகள் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க நிறுவன கணக்காளருக்கு (கிரகபாவம்-41,நட்சத்திரம்-அச்சுவினி, 33வயது) அரச சேவையில் ஆசிரியராக கடமையாற்றுபவர் மட்டும் உடன் ஜாதகம், படம், மற்றும் தொலைபேசி எண் போன்ற விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.*

**விளம்பர இல.3137**
**மே/ப உதயன்**

C/554593

## தவறிவிட்டது

29-08-2008 அன்று நெல்லியடி மக்கள் வங்கிக்கும் நெல்லியடிச் சந்திக்கும் இடையில் உதயகுமார் ஜோகேஸ்வரி (696085085V) என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட முகவரியில் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.12

''உளவிருத்திக் குறைபாட்டை விளங்கிக் கொள்ளல்'' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வெளியீட்டு விழாவில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நூலின் வெளியீட்டு உரையை யாழ்.போதனா வைத்திய சாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஜி.பவானி நிகழ்த்துவார். சாந்திகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,செப்.12

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினரால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30 மணிக்கு பூரணை விழா சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,செப்.12

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வேலணை புளியங்கூடல் மக்களுக்கான மாபெரும் சேவைத்திட்ட முகாம் வேலணை மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொது மருத்துவப் பரிசோதனை, கண் பரிசோதனை, தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கு புதிய உடைகள், மதிய உணவு வழங்கல், முதியோர் இல்லம் தரிசித்தல், முதியோர் கௌரவிப்பு, மரநடுகைத் திட்டம், பசுக்கள், இடபங்கள் இயற்கை வள பாதுகாப்பு விழிப்புணர்வு போன்ற செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

பிராந்தியம் 9 இன் தலைவர் லயன் க.கங்கைவேணியன் அவர்களின் வரவேற்பு நிகழ்வும் இடம்பெறும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**நாகலிங்கம் நாகேந்திரம்**

தோற்றம் 30-03-1924
மறைவு 12-08-2008

12.08.2008 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும் தந்தையாரும், மாமனாருமான நா.நாகேந்திரம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் துக்க நிகழ்வில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (சி/554594)

திரு.திருமதி
பாக்கியநாதன் குடும்பம்.

## தரம் 6 இற்கான அனுமதி 2009

எமது பாடசாலை தரம் 6 - (2009) இற்குரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை பாடசாலையில் 21.10.2008 முதல் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 14.11.2008 இற்கு முன்பாக பாடசாலை அலுவலகத்தல் ஒப்படைக்கவும்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.

அதிபர்.

(சி/554597)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டி - 2008 இல் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தினைப் பெற்று 23 வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்திற்கும் ஊர்காவற்றுறை, பிரதேசத்திற்கும் பெருமை தேடித்தந்த ஊர்காவற்றுறை யா/புனித அந்தோனியார் கல்லூரி மாணவச் செல்வங்களையும், உடனின்று வழிகாட்டிய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்லூரிச் சமூகத்தினர், பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இனிவரும் காலங்களிலும் இனிதான சாதனைகள் நிலைநாட்ட இதயபூர்வமாய் வாழ்த்தி நிற்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.

உதவி அரசாங்க அதிபரும்,
உத்தியோகத்தர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
08 . 09 . 1931



மறைவு
13 . 08 . 2008

**அமரர் இராமு ஜெகநாதன் (சாரதி)**


அப்பா என்ற சொல்லுக்கு
இலக்கணமானவரே
உங்கள் உதிரத்தால் எமை
உரமேற்றி பெரு விருட்சமாக்கியவரே
இந்நாளில் உங்கள் பாதங்களை
எம் கண்ணீரால் அர்ச்சனை செய்கின்றோம்

65/3,ஸ்ரான்லி கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(78358)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மகாகவி பாரதியாரின் நினைவு தினம் நேற்று செப்ரம்பர் 11ஆம் திகதியாகும். அதனையொட்டி நல்லூரில் உள்ள பாரதியார் சிலைக்கு மரியாதை செலுத்தும் முகமாக, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இயக்குநர் சபையினர் மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தனர்.

முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தின் துணை அதிபர் திருமதி எமில் வர்ணோதினி ஆகியோர் பாரதியார் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதை முதல் இரண்டு படங்களிலும், அடுத்துள்ள படத்தில் கல்லூரி மாணவர்கள் கூடிநிற்பதையும் காணலாம். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றம் இடைவெளி இல்லாது கடந்த இருபத்தைந்து வருடங்களாக பாரதியார் விழாவை கொண்டாடி வருகின்றது. நாளை 26ஆவது வருடமாக பாரதி விழா அங்கு கொண்டாடப்படுகிறது. அதன் சிறப்பு நிகழ்வாகவே நல்லூரில் உள்ள பாரதியார் சிலைக்கு நேற்று மலர் மாலை சூடி மரியாதை செலுத்தப்பட்டது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற **உடற்பயிற்சிப் போட்டி யில் 1ஆம் இடம்பெற்று வெற்றிவாகை** சூடி பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை சேர்த்த யா/புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சிஅணி மாணவர்களையும், இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும், வழிகாட்டிய அதிபரையும் பெருமிதத்துடன் வாழ்த்துகின் றோம்.

வலயக்கல்விப்பணிப்பாளரும்,
வலயக்கல்வி அலுவலகப் பணியாளர்களும்.

*தீவக கல்வி வலயம்,*
*வேலணை.*

## கண்ணீர் அஞ்சலி



### கலாபூஷணம் வி.கே. கானமூர்த்தி

கான மழையை வருஷிக்கும்
– உன் கைவிரலும்
ஞானநிலையில் உன்
– நாதஸ்வரம் தந்த
மோன நிறைவும்
முழுநிலவாம் முகத்தினிலே
கூடிக் குதூகலிக்கும் புன்னகையும்
ஓடி மறைந்ததுவோ!
நாதஸ்வரத்தால் நம்மையெல்லாம் ஈர்த்து வந்த
மேதை கானக்குயிலாய்
கைவரிசை காட்டி நின்றாய்
உந்தன் பிரிவால் உள்ளம் உடைந்து உருகுகிறோம்
உங்கள் ஆன்மா வீரகத்தி விநாயகர் சந்நிதியில்
நாதம் இசைக்கும்.

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கலாதேவன்

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,கோடிகாமம் பிரதேச சபை)

பெரியமாவடி,சங்கத்தானை,சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம்.கலாதேவன் 09.09.2008 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர்கள் இராமலிங்கம்(ஓய்வு பெற்ற அதிபர்)-சிவபாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)ஆகியோரின் அன்பு மகனும், அமரர்கள் திரு திருமதி சின்னத்துரையின் மருமகனும், அனுஷா (ஆங்கில ஆசிரியர்,கொ/இந்துக்கல்லூரி, இரத்மலானை)வின் அன்புக் கணவரும்,மைத்திரோயி, மித்திராயினி ஆகியோரின் அன்புத்தந்தையும்,திருமதி இந்திராணி சுப்பிரமணியத்தின் சகோதரரும்,சுப்பிரமணியம்(ஓய்வு பெற்ற அதிபர்), விஜயகுமார் (கனடா), தயாவதி (ஆஸ்திரேலியா), ரவிக்குமார் (பெறியியலாளர்), அனுராதா (ஆஸ்திரேலியா), Dr.மித்திரகுமார் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் பொற்புலம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமாவடி,*
*சங்கத்தானை,சாவகச்சேரி.*

*தகவல்:* மனைவி

## மொனறாகலைக் காட்டில் 7 பேரின் சடலங்கள் மீட்பு

மொனராகலை செப். 12

மொனராகலை காட்டுப் பகுதியிலிருந்து நேற்று வியாழக்கிழமை ஏழு சடலங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

மொனராகலையில் எதிமலே காட்டுப் பகுதியிலிருந்து இச்சடலங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொதுமகன் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் முதலில் இரு சடலங்கள் மீட்கப்பட்டன எனவும், பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஏனைய 5 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் நேற்று மாலை வரை கிடைக்கப்பெறவில்லை. (சி)

## ஆணைக்குழுவில் நேற்று பெண் ஒருவர் சரண்

யாழ்ப்பணம், செப்.12

உயிர் அச்சுறுத்தல் காரணமாக பெண் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுச் சரணடைந்துள்ளார்.


கொடிகாமம்,கச்சாய்வீதியைச் சேர்ந்த 51 வயதான திருமணமாகாத பெண் ஒருவரே இவ்வாறு அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைந்துள்ளார். (1-203)

## இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், 'சக்தி' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்ப்பாணக் கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.




யாழ்ப்பாணம், செப். 12

கந்தர்மடம் ஸ்ரீ கண்ணகை அம்பாள் கோயிலின் மகாகும்பாபிஷேகம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

மண்டலாபிஷேக நிகழ்வுகள் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்.வண்ணை அரசடி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம் பெறும்.

* * *

யாழ்ப்பாணம், செப். 12

அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா கடந்த 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 14ஆம் திகதி இரதோற்சவமும், 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கனகசபை (காரைநகர்)

(ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர் PHI)

காரைநகர், வாரிவளவை பிறப்பிடமாவும் ஆலடி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை நேற்று (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னாச்சி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், செல்வகுமார் (பொறியியலாளர்), கனகமணி (முன்னாள் பொது முகாமையாளர், காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), சாரதாமணி (நிர்வாக உதவியாளர், வவுனியா சுகாதாரத் திணைக்களம்), சிவகுமார் (பொறியியலாளர்), கலாமணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் நந்தினி, தியாகலிங்கம் (SPHI, வவுனியா), பவானி, தியாகலிங்கம் (புள்ளி விவர ஆய்வாளர், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், கவிதா, ஜெயகாந்தன், காஞ்சனா (3 ஆம் வருட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), ஜெயதீபன், நயனி, கலாஜினி, ராகினி, லக்சனா, கம்சத்தனி, கஸ்தூரி, ரவீன், சயனி, ராகுலன், ஜெயகாந்தன் (OS) ஆகியோரின் பேரனும், நிரோசனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.09.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆலடி, காரைநகரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

*ஆலடி, காரைநகர்*

### சாத்தையா நீலகண்டன் ஆசாரியார்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாத்தையா நீலகண்டன் ஆச்சாரியார் நேற்று (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பவள்ளியின் அன்புக் கணவரும் வாமதேவன், மாதவன், பிரதாபன், அம்பிகா, காலஞ்சென்ற பிரசாந் மற்றும் சரணியா, நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அசோகன் காலஞ்சென்ற கிருஸ்ணா மற்றும் வேலு, நாகேஸ்வரி, வீரசேகர், சாந்தி ஆகியோரின் சகோதரனும், அபினயா, விஷ்ணு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21, யாழ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
நீ.வாமதேவன்

### ஆறுமுகம் சாந்தலிங்கம்

மட்டுவில் வடக்கு,சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சாந்தலிங்கம் நேற்று (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் மகனும்,சின்னம்மாவின் அன்புக்கணவரும்,அனுசியா, அஞ்சலிதேவி,திருவருள்,பரம்பொருள், அருணகிரி, அன்பரசி(சுவிஸ்),சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(12.09.2008) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரபுரம்,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்
சா.பரம்பொருள்(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கிளிநொச்சிக்குப் படையினர் சென்றிருப்பதால் அப்பகுதி மக்கள் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுவர் என்று சிலர் சந்தேகப்படுகின்றனர். அப்படி எதுவும் நடக்காது. அவர்களை எமது அரசாங்கம் காப்பாற்றும் - என்றார்.

## "ராடர்"

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-வில்லை. எனினும் தேசிய பாதுகாப் பினைக் கருத்தில் கொண்டு அயல் நாடான இந்தியா அதிநவீன "ராடர்" கருவியை வழங்கி உள்ளது அதனையிட்டு இந்தியா வுக்கு அர சாங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

## தமிழர் இன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமன்றி இராணுவத் தொழில்நுட்ப வியாலர்களையும் அனுப்பி வைத்திருக்கிறது.

இது இந்திய அரசின் உயர்மட்ட அதிகாரிகளின் குறிப்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் மறைமுகமான, இரகசியச் சதியாகும்.

இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள படை அலுவலர்களையும் தொழில் நுட்பவியலாளர் களையும் உடனடியாக திரும்ப அழைக்கவும்.

தமிழர்களை இன அழிப்புச் செய்யும் இலங்கை அரசாங்கத்துக்கு எந்தவிதமான இராணுவ உதவியும் வழங்கவேண்டாம் என்று தங்களை நேரில் சந்தித்து வேண்டிக் கொண் டேன். ஆனால் எனது கோரிக்கை குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுவிட்டது. இப்படிச் சொல்வதற்கு மன்னிக்கவும்.

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் மனிதாபிமான ரீதியில் உணவு மற்றும் மருந்து வகைகளை அனுப்ப மறுத்த இந்திய அரசு, இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வருவது அக்கிரமம். உடனடியாக இந்தியப் படையினரை இலங்கையிலிருந்து திருப்பி அழைக்கவும். - என்று வைகோ தமது கடிதத்தில் கேட்டுள்ளார். (அ)

## இப்பொழுதும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டு உரையாற்றியபோதே மேற்படி தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கச்சதீவு என்பது ஒரு தரிசு நிலம். நிரந்தரமாக மக்கள் வசிப்பதில்லை. நிரந்தரக் கட்டடங்களும் கிடையாது. அங்கு ஒரேயொரு ரோமன் கத்தோலிக்க ஆலயம் மாத்திரம் உள்ளது.

இந்தத் தீவு எந்த நாட்டுக்குச் சொந்தம் என்ற பிரச்சினை 1921 ஆம் ஆண்டு எழுந்தது. மீன்பிடித் தொழில் தொடர்பான பிரச்சினையால் இது பூதாகரமாக வெடித்தது.

1924ஆம் ஆண்டு இந்திய நில அளவையாளர்கள் வெளியிட்ட அறிக்கையின் படி கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது.

1971ஆம் ஆண்டு இலங்கை - இந்திய நாடுகளிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர் இலங் கைக் கடல் எல்லையைத் தாண்டிவந்தோ இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றோ மீன் பிடிக்க முடியாது.

இந்திய மீனவர்கள் சுடப்படுகின்றார்கள் என்பதில் எவ்வித உண்மையும் இல்லை

அந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளுக்கிடையிலான கடல் எல்லை மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எமது நாட்டுக் கடற்படையினர் இந்திய மீனவர்களைச் சுட்டுக் கொன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர்.

இந்தக் குற்றச்சாட்டில் எந்தவித உண் மையுமில்லை. எமது கடற்படையினர் இந்திய மீனவர்கள் பலரின் உயிரைக் காப் பாற்றியிருக்கின்றார்கள்.

இந்தப் பொய்க்குற்றச்சாட்டை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குச் சொந் தமான கச்சதீவை இந்தியா கையேற்க வேண்டும் என்று சுயலாபத்திற்காக அரசி யல் செய்யும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

அவர்கள் தமிழ்நாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இலங்கையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தம்மால் எதுவும் செய்யமுடியாது என்று அந்த நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. கச்சதீவு போத்துக்கேயர் மற்றும் ஆங்கி லேயர் காலத்தில் கூட இலங்கைக்கே சொந்த மாக இருந்தது. இத் தீவு எக்காலத்திலும் இலங்கைக்கே சொந்தம் - என்றார்.

## நாகசுர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் இரவு உயிர் துறந்தார்.

தமது 14ஆவது வயதில் நாகசுர இசைத் துறையில் காலடி வைத்து தமது தம்பியாரான பஞ்சமூர்த்தியுடன் இணைந்து நாகசுரத் துறையில் இணையற்ற இரட்டையர்களாக மிளிர்ந்தார். கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி இரட்டையர்கள் என இவர்கள் இசைத்துறையில் புகழ்பெற்று விளங்கி னார்கள்.

இந்தியா, சிங்கப்பூர், லண்டன், சுவிட்ஸர்லாந்து, கனடா எனப் பல வெளிநாடுகளுக்கும் சென்று அங்குள்ள இசை அபிமானிகளை நாகசுர இசையில் நனைய வைத்தும் கான மழை பொழிந்தவர் கானமூர்த்தி.

3ஆண் பிள்ளைகளும் 2 பெண் பிள்ளைகளையும், மனைவியை விட்டுப் பிரிந்துள்ள அவரின் இறுதிக் கிரியைகள் கோண்டாவில் மேற்கில் உள்ள அவரது இல்லத் தில் இரண்டு மூன்று நாள்களுக்குள் நடைபெறும்.

## உதவிப் பணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

மேற்கொள்ளப்படும் பணிகளில், அரசின் அறிவிப்பு தாக்கத்தை ஏற்படுத்துமென தெரிவித்துள்ள கோர்டன் வெயஸ், எனினும் வன்னியில் தொடர்ந்தும் செயற்படும் அரச அமைப்புகளூடாக, முடிந்தளவிற்கு தாங்கள் உதவிச் செயற்பாடுகளில் ஈடுபடப்போகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மனிதாபிமான முகவர் அமைப்புகளின் சம்மேளனத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜீவன் தியாகராஜா, வன்னியிலிருந்து மனிதாபிமான அமைப்புகள் வெளியேறுவது தற்போது இடம்பெறும் நிவாரணப் பணிகளைத் தாமதப்படுத்துமென்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் வன்னிக்கான விநியோகத்தினை அரசின் அனுமதியுடன் மாத்திரமே எடுத்து செல்ல முடியுமென் பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச அதிபர்களின் வாகனத் தொடரணிகள் மூலமாக விநியோகத்தினை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படும் என்றும் அதேவேளை வன்னியில் மோதல் தீவிரமடைந்தால் அப்பாவி பொது மக்களினதும், அரச சார்பற்ற அமைப்புகளினதும் நிலைமை மேலும் ஆபத்துள்ளதாக் மாறலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## தொண்டு நிறுவனங்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

இலங்கையில் தமிழர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பிரதேசத்தில் சிங்கள அரசினால் கட்டவிழ்க்கப்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்க ளுக்கு நிவாரணப்பணி செய்து வந்த சர்வதேச தொண்டு நிறுவனங்களை வன்னிப்பகுதியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு சிங்கள அரசு கட்டளை விடுத்துள்ளது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இக்கட்டளையானது தமிழ் மக்களை வகை தொகையின்றி வான் குண்டு வீச்சுகளாலும் எறிகணை வீச்சுகளாலும் ஆழ ஊடுரு வும் படையினராலும் அழித்து வந்த இனக் குரூரத்தின் இன்னொரு உச்ச வெளிப்பாடாகும்.

அவ்வாறு அவர்கள் வெளியேறுவார்களாயின் ஏற்கனவே படுகொலைகளாலும் படுகாயங்களாலும் பல முறை இடம் பெயர்வுகளாலும் சிதைந்து அச்சத்தில் உறைந்து மனப்பாதிப்புக்கு உட்பட்டுள்ள தமிழ் மக்களை மேலும் அச்சத்தில் உறையவைக்கும், மனப்பாதிப்பை ஏற்ப டுத்தும் செயலாகவே அவர்களின் வெளி யேற்றம் இருக்கும்.

**விடுதலைப்புலிகளின் விருப்பத்தையும் அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும்**

தொண்டு நிறுவனங்கள் வன்னிப்பகுதிக்குள் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள அரசாங்கத்திடம் மட்டுமன்றி விடுதலைப்புலிகள் அமைப்பிடமும் அதாவது, முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட இருதரப்பிடமும் அனுமதியைப் பெற்றே பணியாற்றின. ஒரு தரப்பு அவர்களை மீள அழைக்கும் போது மறுதரப்பின் அனுமதியையும் விருப்பத்தையும் கேட்க வேண்டிய பொறுப்பு தொண்டு நிறுவனங்களுக்கு உண்டு.

ஒரு பொறுப்பை எடுத்து குறித்த ஒப்பந்தத்துடன் வந்து விட்டு இடைநடுவில் தமிழ் மக்களை கைவிட்டுச் சென்றால் அதனை ஒரு பொறுப்பற்ற செயலாகவே கருதவேண்டும்.

உணவையும் மருந்தையும் ஆயுதமாக பயன்படுத்தி மக்களை இடம்பெயரச் செய்து மரங்களுக்கு கீழ் வாழும் அவல நிலையில் மனிதாபிமானப் பணியாளர்கள் கைவிட்டுச் செல்வார்களாயின் அம்மக்களின் நிலை என்ன என்பதை தொண்டு நிறுவனங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்**

அந்த மக்களை தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறுமாறு கேட்பது அவர்களின் சொந்த இடங்களின் வாழும் உரிமையை மறுப்பதாகும்.

இந்த நேரத்திலாவது சிங்கள இன வாதிகளின் இன அழிப்பு குரூரத்தை அனைத்துலக சமூகம் புரிந்த கொள்ள வேண்டும். ஒரு புறம் இன அழிப்பும் இன்னொரு புறம் மனிதாபி மானப் பணிகளும் ஒருங்கே நடைபெற முடியாது என்பதை விளங்கிக் கொண்டு உடனடியாக இராணுவத்தை தமிழ் பகுதிக்குள் இருந்து அப்புறப் படுத்தி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளாலி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் நான்கு விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர் எனபாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி இராணுவத்தினர் ஊடுருவி அவர் களது பதுங்கு குழிகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.


**V4 Educational Consultancy (Pvt) Ltd.**

Admission 2008 - Sona College of Engineering

கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் எமது பிரதிநிதியினால் 11-09-2008 தொடக்கம் 20-09-2008 வரை உடனடி அனுமதிகள் (Spot Admission) எமது யாழ் அலுவலகத்தில் நேரடியாக வழங்கப்படுகிறது.

Eligiblity :
* A/L 3 Pass or Pending Results

➤ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை
➤ இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு
0773867257 (Jeyakanth)
0774366711
0775936343 (Elankeethan)
0212228374

இல 274, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி யாழ்ப்பாணம்

**BRIGHTMAN**

பிறவுண் வீதி திராவிடி யாழ்.நகர்

புதிய பிரிவு 5 — 3 மாத காலத்தில் சரளமாக உரையாட **சிங்களம்**
பேராசிரியர்:- லீலாக்கிருஷ்ணைவ்
ஆரம்பம்:- 13.09.08 SAT 3.00 PM

SPOKEN ENGLISH WITH GRAMMAR BY:- KARAN
ஆரம்பம்:- 13.09.08 SAT 2.00 PM

**நாளை ஆரம்பம் CBF, aat**

| aat | CBF |
|---|---|
| 3-4 (மாலை) | 4-5 (மாலை) |

ACCOUNTING D.Sam
DMI நாவலர் வீதி,யாழ்.

**சுடர் ஒளி**
THE SUDAR OLI
ஆக.31 - செப் 06, 2008
இப்போது விற்பனையில்

**பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்**
A/L, 2009- இந்துநாகரீகம்
PAPER CLASS WITH RIVISION
MR.P.ஜோதீஸ்வரன்
சனி- ஞாயிறு:- 11.00- 12.00
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

முன்னணி நிறுவனங்களில்
A/L தமிழ் 2009 மீட்டல், வினாவிடை
வெற்றி வழி-சனி, ஞாயிறு வகுப்புகள்
BEACON 1. வெலிங்டன் சந்தி-11.00-12.00 1. நாவலர் வீதி-12.00-1.00
Subra 14 சித்தன்கேணி - 7.00-8.00
NAC- ஊரெழு (பாடசாலைஅருகில்) 3.00-4.00
M.G.C கல்வியங்காடு-புதன், வெள்ளி
2010 தொகுதி ஆரம்பம் ... நாகர்.
முதல் நாள் வகுப்பில் இலக்கண நூல் இலவசம்

**நாளை ஆரம்பம்**
PAPER CLASS A/L - 2009
இந்து நாகரீகம் ஜோதீஸ்வரன்
காலை - 9 மணி
DMI நாவலர் வீதி,யாழ்.

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA
2009 A/L
WEEKEND PAST PAPER CLASS
2008 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது.
CHEMISTRY
திரு.N.மகேஸ்வரன் Sat/sun 7.30 - 8.30
PHYSICS
திரு.S.சோதிலிங்கம் Sat/sun 8.30 - 9.30
BIOLOGY
Sat/sun 10.00 - 12.00
வழமையான ஆசிரியர்கள்
ஆரம்பம்: 13.09.2008

**Chemistry Personal Class 2009/2010**
General, Basic Chemistry, Organic Chemistry, Physical Chemistry, கடந்தகால வினாக்கள் கற்பிக்கப்படும்.
ஆசிரியர் T.பராபரன்
B.Sc.(Cey),M.Sc.(Cey)(Chemistry)
T.P.:0776038913

**தொழிற் பயிற்சிகள்**
உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.
Mobile Phone Repairing
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock
காலம்:- 2 மாதங்கள்
Diploma in Hard Ware Engineering
காலம்:- 3 மாதங்கள்
* றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பெயறிங்
சகல இன றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9 மாதங்கள்
* ஏயார் கொண்டிசனிங்
சகல குளிசாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதங்கள்
* எலக்ரிக்கல் வயறிங், றிவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan, Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 6 மாதங்கள்
ஆரம்பம்:- 14.09.08 (ஞாயிறுக்கிழமை) 15.09.08 (திங்கட்கிழமை)
JAFFNA TECHNICAL INSTITUTE
இல, 45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212226434

**ஈசன் கல்வி நிலையம்** கே.கே.எஸ். வீதி-கன்னாதம்
பௌதிகவியல்
PASS PAPER CLASS
திரு.குமரன்
ஆரம்பம்:- 14.09.08
நேரம்:- 4.45 pm
அடுத்த வகுப்பு 18.09.08 வியாழன்

**ENGLISH SPOKEN WITH GRAMMAR**
By BRITTO
புதிய பிரிவு II
ஆரம்பம் 13.09.2008
நேரம்:- காலை 6.30 மணி
இடம்:- கொக்குவில் (ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)
(வெள்ளி/சனி வகுப்புக்கள்)

**M.A, Mcom, MBA, MSc (MATHS) PG DIPLOMA**
**காமராசர் பல்கலைக்கழகம் [மதுரை]**
* பல்லைக்கழகத்தினால் வைகாசி மாதம் பரீட்சை எடுப்பதற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
MA இல் வரலாறு, அரசியல் விஞ்ஞானம் பொருளியல், பொது நிர்வாகம், சமூகவியல், ஆங்கிலம், இலக்கியம், தமிழ், சமயமும் தத்துவமும், JOURNALISM AND MASS COMMUNICATION ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.
M Comல் COMMERCE, BANKING, CO.OPERATIVE MANAGEMENT ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்யலாம்.
P.G. DIPLOMA 1 வருட கற்கை நெறியாக பின்வரும் பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும். MANEGEMENT, MARKENTING MANEGEMENT, HOSPITAL MANEGEMENT, N.G.O MANEGEMENT, COMPUTER APPLICATION, JOURNALISM AND, MASS COMMINICATION.
குறிப்பு:- 1) பதிவுத் திகதி 20.10.2008 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
2) கடந்த வைகாசி மாத பரீட்சை எடுத்தவர்களின் பரீட்சை முடிவுகளை காரியாலயத்தில் பார்வையிடலாம்.
யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்லைக்கழகம்
T.P NO:- 222 8148, 222 3208
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org